janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 85 | 2023 பிப்ரவரி 26 - மார்ச் 04 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 47




## அதானியின் சொத்துக்களை பறிமுதல் செய்திடுக — பிப். 21, 22, 23-ல்

# இளைஞர்கள் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்

**அதானியின் சொத்துக்களை பறிமுதல் செய்யக்கோரி அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் பிப். 21, 22, 23 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**







கொரோனா காலத்தில் நாடே பசி, பஞ்சம், பட்டினி, சாவை எதிர் கொண்ட போது அதானியின் சொத்து மட்டும் 800 மடங்கு உயர்ந்தது.

இவையெல்லாம் ஒன்றிய அரசின் ஆதரவோடு குறிப்பாக பி.ஜே.பி ஆர்.எஸ்.எஸ். பக்க பலத்தோடு இந்திய உழைக்கும் மக்களின் உழைப்பையும் இயற்கை மற்றும் கனிம வளங்களை கொள்ளையடித்ததின் விளைவாக தான் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இவ்வளவு சொத்து குவிந்ததற்கு முக்கிய காரணமாகும்.

மேலும் பிரதமர் மோடி வெளிநாட்டு பயணத்தின் போது அதானியையும் அழைத்து சென்றார்.

பாகிஸ்தான் முதல் ஆஸ்திரேலியா, இலங்கை இஸ்ரேல் வரை அதானி முதலீடு செய்யாதே நாடே இல்லை.

இந்த முதலீடுககளில் பெரும்பங்கு பொதுத்துறை வங்கியான ஸ்டேட் பாங்க் ஆப் இண்டியாவில் வாங்கிய கடனும் எல்.ஐ.சி அதானி குழுமத்தில் போட்ட முதலீடுகளுமே காரணம்.

இந்நிலையில் கடந்த 5ஆண்டுகளுக்கு முன்பு உலகப்பணக்காரரார்கள் பட்டியலில் 609 வது இடத்தில் அதானி தற்போது இரண்டாவது பிடித்துள்ளார். இது பலருக்கும் சந்தேகத்தை உருவாக்கியது.

இது குறித்து ஆய்வு செய்த ஹிண்டர் பர்க் தனது ஆய்வறிக்கையில் அதானி குழுமம் பல நாடுகளில் போலி நிறுவனங்களை உருவாக்கி அந்நிறுவனங்கள் அதானி குழுமத்தின் பங்குகளை அதிக விலைக்கொடுத்து வாங்கி பங்கு சந்தையில் அதானி குழுமத்தின் பங்குகளின் மீதான மதிப்பை உயர்த்தி காட்டி ஊழல் முறை கேடுகளில் ஈடுபட்டதை அம்பலப்படுத்தியவுடன் அதானிகுழுமத்தின் பங்குகள் பெருமளவில் சரிந்தன.

இதனால் பொதுத்துறையில் அதானிகுழுமம் வாங்கிய கடன் தொகை மற்றும் எல்.ஐ.சி மூதலீட்டு தொகை அனைத்தும் கேள்விக்குரியாகி உள்ளன.

அதானி குழுமம் ஏற்கனவே துறைமுகங்கள், நிலக்கரி நிறுவனங்கள், மீத்தேன், சிமெண்ட் ஆலைகள் உள்ளிட்ட பொதுச்சொத்துக்களையும் உள்ளிட்டு தகவல் தொழில்நுட்டம் விவசாயம் தொழில்கள் உள்ளிட்ட எல்லாவற்றையும் தனது வசமாக்கிவிட்டது. இது ஒன்றிய அரசின் ஆதரவோடு தான் நடைபெற்றுள்ளது.

ஆகவே தான் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம்

இந்தியா காந்தி தேசமா?.

அதானி தேசமா?

இந்திய உழைக்கும் மக்களின் பொதுச்சொத்துக்களை சூறையாடி கொழுத்துப்போன அதானியின் சொத்துக்களை பறிமுதல் செய்யக்கோரி தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தியது. முதற்கட்டமாக திருப்பூர் மாநகர்,திருநெல்வேலி,சேலம்,விருதுநகர், நெல்லை, திருச்சி, புதுக்கோட்டை, தேனி,மதுரை புறநகர்,,தூத்துக்குடி, ஈரோடு வடக்கு பவானியில் போராட்டங்கள் நடைபெற்றன. மேலும் அதானியின் சொத்துக்களை பறிமுதல் செய்யக்கோரி இளைஞர் பெருமன்றம் தொடர்ந்த போராட்டங்களுக்கு திட்டமிட்டுள்ளது.

## சிறுபான்மையின மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையை நிறுத்தாதே!

# மாணவர்கள் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்!

**ஒன்றிய அரசு சிறுபான்மையின மாணவர்களுக்கு வழங்கி வந்த கல்வி உதவித் தொகையை முழுமையாக நிறுத்தி இருப்பதைக் கண்டித்தும், அனைத்து மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகையை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியும், தமிழ்நாடு அரசு விடுதி மாணவர்களுக்கு வழங்கி வரும் உணவுத்தொகையை மாதம் ஐந்தாயிரம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும் என வலியுறுத்தியும் தமிழ்நாடு முழுவதும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சார்பில் 17.02.2023ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**




**தென்சென்னை:** பனகல் மாளிகை அருகில் தென்சென்னை மாவட்ட செயலாளர் ஆ.மணிகண்டன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு மாநில செயலாளர் பா. தினேஷ் கலந்து கொண்டு உரையாற்றினார். இதில் மாவட்ட தலைவர் ம.சண்முகபிரியன், மாநிலக் குழு உறுப்பினர் முபின் மாவட்டப் பொருளாளர் ஸ்வேதா, மாவட்ட துணைச் செயலாளர்கள் அபிஷேக் மற்றும் வினோதா, கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் சுந்தரம் கலந்துகொண்டனர்.

**நாமக்கல்:** நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு புவனேஷ் தலைமை வகித்தார். தமிழ்நாடு மாநில தலைவர் தினேஷ் சீரங்கராஜ் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். மேலும், இளைஞர் பெருமன்ற நிர்வாகி கணேஷ்குமார் கலந்து கொண்டனர்.

**திருச்சி:** திருச்சி மாநகர், புறநகர் மாவட்டக் குழுக்களின் சார்பில் அண்ணா சிலை பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநகர் மாவட்டச் செயலாளர் ரா.கார்த்தி, புறநகர் மாவட்டச் செயலாளர் கே.எம். பிரவீன் ஆகியோர் தலைமை வகித்தனர். தமிழ்நாடு மாநில பொருளாளர் க.இப்ராகிம் கண்டன உரை நிகழ்த்தினார். தொடர்ந்து முன்னாள் மாநில துணைச் செயலாளர் ஜி. ஆர். தினேஷ் குமார், இளைஞர் பெருமன்ற மாநகர் மாவட்டச் செயலாளர் எம். செல்வகுமார், புறநகர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.தமிழரசன், மாணவர் பெருமன்ற மாவட்ட துணைச் செயலாளர் ஜெயலானி ஆகியோர்

தொடர்ச்சி 15ம் பக்கம்

கட்சிக் கடிதம்



# எங்கே எனது வேலை?

## போர்க்களம் காணும் இளைஞர் பெருமன்ற தோழர்கள்!



பேரன்புமிக்க தோழர்களே!

**அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் மாநில மாநாடும் – பேரணியும் வெற்றிகரமான முறையில் நடந்து முடிந்துள்ளது. அதனைத் தொடர்ந்து நேற்றைய மாணவர்கள்– இன்றைய இளைஞர்கள் எங்கே எனது வேலை? எனக் கேட்டு தமிழகம் தழுவிய பிரச்சார பேரியக்கத்தை மேற்கொள்ள மிகத் துணிச்சலாக முடிவு எடுத்துள்ளனர்.**

நாடு முழுவதும் கோடிக்கணக்கான இளைஞர்கள் தங்களின் எதிர்கால வாழ்வு என்னவாகுமோ என்ற அச்சமும், அவநம்பிக்கையும் கொண்டு தங்களின் ஏழ்மை நிலை போக்க, எதிர்கால வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க, நம்பிக்கையூட்ட எவரும் இல்லையா? என வினா எழுப்பிய நிலையில்,

ஏன் இல்லை? இதோ நாங்கள் இருக்கின்றோம்; அச்சப்பட வேண்டாம் எங்களுடன் அணிவகுத்து வாருங்கள் என அழைப்பு விடுத்து களம் காண தயாராகி விட்டார்கள்.

ஆம்! அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழு கூடி, எங்கே எனது வேலை! என்று போர்ப் பிரகடன கேள்வி எழுப்பியுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் பிரச்சார பேரியக்கத்தை மேற்கொள்ள உள்ளனர்.

நகரங்கள் மட்டுமின்றி, பட்டி தொட்டி எங்கும் தங்களின் போர்ப் பிரகடனத்தை எதிரொலிக்க உள்ளனர்.

ஒவ்வொரு பெற்றோரும் தங்களின் பிள்ளைகள் படிக்க வேண்டும், பட்டம் பெற வேண்டும் என விரும்புகின்றனர்.

தங்களின் சீரழிந்த வாழ்க்கை தங்களின் பிள்ளைகளுக்கும் வந்துவிடக்கூடாது என்று கருதுகின்றனர்.

தங்களுக்கு வேலையில்லை, இருந்தாலும் சொற்ப ஊதியம், அதற்கும் நிரந்தரம் இல்லை, பணிப் பாதுகாப்பு இல்லை என்ற போதும், கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியை சேமித்தும், வட்டிக்கு கடன் பெற்றும் பிள்ளைகளை எப்படியாவது படிக்க வைத்து விட வேண்டும் என்பதற்காக படாதபாடு படுகின்றனர்.

பிள்ளைகள் படித்தால், பட்டம் பெற்றால் ஏதாவது ஒரு வேலை கிடைக்கும் என்கிற நம்பிக்கையோடு படிக்க வைக்கின்றனர்.

பெற்றோரின் கனவை நனவாக்க பிள்ளைகளும் படித்து பட்டங்கள் பெறுகின்றன.

பட்டம் பெற்று என்ன பயன்? பல்கலைக்கழகங்கள் வழங்கிய உண்மையான பட்ட சான்றிதழ்கள் பெற்ற நாளில் பிள்ளைகளுக்கும் – பெற்றவர்களுக்கும் ஏற்பட்ட அளவில்லா மகிழ்ச்சி அர்த்தமற்றதாகி விட்டது.

வேலைவாய்ப்பு தேடித் தரும் அலுவலகம் நாடு முழுவதும் உள்ளது. பதிவு செய்து காத்திருப்போர் பட்டியலும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

ஒன்றிய அரசின் பிரதமராக பொறுப்பேற்றுள்ள நரேந்திர மோடி அவர்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை வழங்குவோம் என்று உறுதி அளித்தார்.

அவர் விரும்பியபடியே வாக்குகளை அள்ளிக் குவித்தார்! ஆனால் ஆண்டுகள் ஒன்பது ஆகிவிட்டது. அவர் அளித்த உறுதிமொழிப்படி 18 கோடி பேருக்கு வேலை கொடுத்திருக்க வேண்டும். கொடுத்தார்களா?

ஆட்சிக்கு வரவேண்டும் என்பதற்காக வழங்கிய வாக்குறுதி காற்றில் பறக்கின்றது. பணியில் இருப்பவர்களில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவோரை நிரந்தரம் செய்வோம் என்றார்கள்! செய்தார்களா?

ஒன்றிய அரசானாலும், மாநில அரசுகளாக இருந்தாலும் அரசுப் பணியிடங்களில் ஏற்பட்டுள்ள காலியிடங்களை பூர்த்தி செய்வதில்லை. காலியான இடம் காலியாகவே உள்ளது. பணியில் இருப்பவர்களின் பணிச்சுமை அதிகரித்துள்ளது.

குறைந்த ஊதியம் பெறக்கூடிய பணியாளர்களின் ஊதியம் உயர்த்தப்படும் என்ற வாக்குறுதி நிறைவேறியதா? எனில் அதுவும் இல்லை.

காலியிடங்கள் நிரப்பப்படுவதில்லை; பணிகளை நிரந்தரமாக்குவதும் இல்லை; ஊதிய உயர்வும் இல்லை.

பணியில் இருப்பவர்களின் கதி இந்நிலைமை என்றால், வேலையில்லாமல் இருப்பவர்களின் நிலையோ அந்தோ பரிதாபத்துக்குரிய நிலை!

இளைஞர்கள்தான் நாட்டின் எதிர்காலம் என்றெல்லாம் மேடைதோறும் முழக்கமிட்டு வரும் மோடி, அவர்களின் எதிர்காலம் குறித்து கிஞ்சிற்றும் கவலைப்பட்டவராக இல்லை.

மாறாக வேலை கொடுப்பேன் என்று உறுதியளித்த பிரதமர் வேலை கொடுக்கவில்லை என்பது மட்டுமல்ல, வேலையில் இருப்பவர்களையும் வீட்டுக்கு அனுப்பும் செயலைத்தான் செய்து வருகின்றார்.




பொதுத்துறை, தனியார்துறை என்று எவ்வித வேறுபாடும் இல்லாமல் ஒப்பந்த தொழிலாளர்களே நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அரசுத்துறைகள் அனைத்திலும் ஒப்பந்த பணியாளர்கள், குறைந்த ஊதியம் என்ற நிலை தொடர்ந்தால், இளைஞர்களின் எதிர்காலம் என்னாவது?

வேலையின்மை கொடுமை குறித்தும், பணியில் அமர்த்தப்படும் அவலம் குறித்தும் பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டே இருக்கலாம்.

தீர்வு என்ன என்பதே பிரச்சனை. வளர்கிறது, நாடு வளர்ச்சியை நோக்கி விரைகின்றது என்று நாள்தோறும் முழங்குகின்றார் மோடியார்!

நாடா வளர்ச்சியடைகின்றது? நாட்டில் உள்ள மக்களா வளர்ச்சி அடைகின்றனர்?

இல்லை, மாறாக மோடியின் ஆட்சியில் அதானி, அம்பானி குடும்பங்கள் வளர்கின்றது. பாய்ச்சல் வேகத்தில், மின்னல் வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கின்றன என்பதே உண்மை.

மாறாக ஏழைகள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் நாள்தோறும் மின்னல் வேகத்தில் சரிந்து கொண்டே இருக்கின்றனர். இளைஞர்கள் வேலை தேடி அலைகின்றார்கள்!

ஒன்றிய அரசனாலும், மாநில அரசுகள் ஆனாலும் வேலை உத்திரவாதத்தை உறுதிப்படுத்திட வேண்டும்.

**இதனை வலியுறுத்தியே தமிழகத்தில் நான்கு முனைகளில் இருந்து இளைஞர் பெரும்படை போர்ப் பிரகடனம் செய்து பிரச்சாரத்தை தொடங்குகின்றது.**

**வேதாரண்யம், ஒசூர், சென்னை, குமரி ஆகிய நான்கு முனைகளில் இருந்து மார்ச் 23ஆம் நாள் பயணக் குழு புறப்படுகின்றது.**

விடுதலைப் போர்க்களத்தில் முன்னணி படை வீரனாக திகழ்ந்து நாடு முழுவதும் உள்ள இளைஞர்களை அந்நிய ஆட்சிக்கு எதிரான போர்க்களத்தில் பங்கேற்ற செய்த மாவீரன் பகத்சிங் நினைவு நாளாம் மார்ச் 23–ல் தங்களின் போர்ப் பயணத்தை தொடங்குகிறார்கள்.

தமிழகத்தை வளம் வந்து, லட்சக்கணக்கான இளைஞர்களை, பெற்றோர்களை, பொதுமக்களை சந்தித்து, நிறைவாக ஏப்ரல் இரண்டாம் நாள் மலைக்கோட்டை மாநகரான திருச்சியில் சங்கமிக்கவுள்ளனர்.

ஏப்ரல் இரண்டாம் நாள் என்பது இளைஞர்களின் எழுச்சி நாயகன் பாலன் பிறந்திட்ட நான்னாளாகும். அந்தநாளில் எங்கே எனது வேலை? என முழக்கமிட்டு திருச்சியில் சங்கமிக்க உள்ளார்கள்.


இளைஞர் பெரும்படையின் போர் முழக்க இயக்கம் வெற்றி பெற, அனைத்து அமைப்புகளும் தோழர்களும் ஆதரவுகரம் நீட்டுவீர்.

இளைஞர்கள் வரும் வழியெங்கும் ஆயிரக்கணக்கில் திரண்டு வரவேற்று ஆதரவுக்கரம் நீட்டுவீர்!

நிறைவாக திருச்சியில் நடைபெறும் பொது மாநாட்டில் பல்லாயிரம் இளைஞர்கள் பங்கேற்க, நமது வீட்டு பிள்ளைகளை, பேரன், பேத்திகளை அனுப்பி வைப்பீர்!

அவர்களோடு, அவர்களுக்கு துணை நிற்க நீங்களும் வாருங்கள். சந்திப்போம்.

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# இந்தியாவின் ஜிடிபி மற்றும் மனித வளர்ச்சிக் குறியீட்டின் போக்கு



வஹிதா நிஜாம்

**அரசியல் ரீதியில் 2023ம் ஆண்டு முக்கியமானது, அது 2024 பொதுத் தேர்தலுக்கான களத்தை அமைக்கும். வாக்குகளைத் துருவங்களாகப் பிளவுபடுத்த பாஜக நெறியற்ற எதனையும் செய்யத் துணிந்தது என்பது அறிந்ததே.**

பொருளாதாரத்தைப் பொருத்த அளவில் அதனைக் கையாள்வதில் அக்கட்சியின் செயல்பாடு மோசமான மதிப்பெண் பெற்றது. தனது தோல்விகளைத் ஜமுக்காளத்தில் மூடிமறைப்பதில் அது பலே கில்லாடி. கோவிட் பெருந்தொற்றின் பாதிப்பிலிருந்து இந்தியப் பொருளாதாரம் முழுமையாக மீண்டு விட்டதாகக் கூறும் 2023 – 24ம் ஆண்டிற்கான பொருளாதார சர்வே, அதன் வளர்ச்சி 2023 – 24ம் ஆண்டில் 6லிருந்து 6.8 சதவீதமாக எதிர்பார்க்கிறது.




நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் மீண்டும் ஒருமுறை உற்சாகமற்ற உதவாக்கரை வெற்று பட்ஜெட்டைச் சமர்பித்துள்ளார். கடந்த எட்டாண்டுகள் ஆட்சியின்போது பாஜக எடுத்த நடவடிக்கைகளின் நிகர பாதிப்பை இல்லாமல் ஆக்குவதோ அல்லது மீட்பதிலோ அதன் எந்தக் கொள்கைகளின் மூலமாகவும் நடத்த முடியாது; காரணம், அதன் ஒவ்வொரு கொள்கையும் அவர்களது கார்ப்பரேட் நண்பர்களின் நலன்களுக்குச் சேவை செய்வதேயாகும்.

ஹிண்டன்பர்க் ஆய்வறிக்கை இவ்வுண்மையைச் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளது. தவிரவும், ஜிடிபி அறிக்கையும், பேரழிவாகிய பசியின் எதார்த்த உண்மை மற்றும் சரியும் சுகாதாரக் குறியீடுகள் குறித்து ஐநா வளர்ச்சி திட்ட (UNDP) அறிக்கை வெளிப்படுத்துகிறது.

உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரத் தரத்தில் இருக்கும் இந்தியா, அதே நேரம் மனித வளர்ச்சிக் குறியீட்டில் (HDI, ஹூமன் டெவலப்மெண்ட் இன்டெக்ஸ்) 132வது தரவரிசையில் உள்ளது. இவற்றிலிருந்து தேசம் எத்திசையில் செல்கிறது என்ற போக்கு தெளிவாகிறது.

இதுவரை ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி)யைப் பொருத்தவரை அது, நாடு முழுவதும் ஓர் ஆண்டில் நிதி சார்ந்த, அனைத்து உற்பத்தி பண்டங்கள் மற்றும் சேவைகளின் சந்தை மதிப்பு உற்பத்தியாக இருந்தது. ஜிடிபியை மொத்த மக்கள் தொகையால் வகுக்கக் கிடைப்பது ஒரு 'தனிநபர் சராசரி ஜிடிபி.' இவ்வாறு ஜிடிபி மற்றும் தனிநபர் சராசரி ஜிடிபி இவ்விரண்டும் ஒரு நாடு தனது மக்கள் தொகைக்கான தேசத்தின் பொருளாதார உற்பத்தியின் அளவீடுகள் ஆகும்.

எனவே இந்த எண்கள் மக்களின் பொருளாதார நலவாழ்வின் முழுமையான அளவீடு ஆகாது. அது ஒரு சராசரி எண், அது வெளிப்படுத்தும் உண்மைகளைவிட மூடி மறைப்பதே அதிகமானதாகும். எனவே நலமாக இருப்பது அல்லது ஜிடிபி அதிகரிப்பு என்பது ஒட்டுமொத்த மக்களின் நலம் மற்றும் வளர்ச்சியைச் சுட்டிக் காட்டாது.

அமெரிக்காவின் பெரும் பொருளாதாரப் பின்னடைவின்போது அமெரிக்கத் தேசிய வருவாய் 1932ல் எந்த அளவு சென்றது என்பதைப் புரிந்து கொள்ள அமெரிக்கப் பொருளாதார நிபுணர் சிமோன் குஸ்நெட்ஸ் ஜிடிபி முறையைக் கண்டுபிடித்தார். இரண்டாவது உலகப் போரின்போது ஜான் மெனார்டு கெயின்ஸ் நவீன ஜிடிபி யை மேம்படுத்தினார்.

அவரது ஜிடிபி கணக்கிடும் முறையில் தேசத்தின் வருவாயில் அரசு செலவிடுவதும் சேர்க்கப்பட்டது. இந்த முன்னெடுப்பு போர்க்காலத் தேவைகளால் இயக்கப்பட்டது. விரைவில் அந்த முறை ஏற்கப்பட இன்று வரை அதுவே தொடர்கிறது.

எனவே, தொழிற்புரட்சிகாலத்தில் பிறந்து, நவீன முதலாளித்துவத்தை ஆதரிக்கும் கொள்கையாக மேம்படுத்தப்பட்ட ஜிடிபி தற்போது, புதிய தாராளமயத்தில் எந்த அளவுக்கு ஏழ்மையையும், இல்லாமையையும் மறைக்க முடியுமோ அதற்குப் பயன்பட்டு வருகிறது. மொத்த உற்பத்தி எவ்வளவு என்பதில் மட்டுமே அக்கறைபடும் ஜிடிபி, உற்பத்தியின் பலன்களை யார் அறுவடை செய்கிறார்கள் என அக்கறை காட்டுவதில்லை.

மேலும் அதுவே பொருளாதார அந்தஸ்து எந்த மட்டத்தில், 'உயர் வருவாய் பிரிவினர்', 'நடுத்தர' அல்லது உருவாகிவரும் அதிகாரமா என்பதைத் தீர்மானிக்கிறது. 21ம் நூற்றாண்டிலும்கூட வளர்ந்த மற்றும் வளர்ந்துவரும் நாடுகளுக்கு இடையில் வேறுபாடு ஜிடிபி யைக் கொண்டு முடிவு செய்யப்படுகிறது. ஜிடிபி அடிப்படையில் பிரிக்ஸ் நாடுகள் அமைப்பு உருவாக்கப்பட்டது. தனிநபர் சராசரி ஜிடிபி ஒத்து இருக்கும் இரண்டு நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறியீட்டு தர மதிப்பெண் நிலையில் மட்டும் எப்படி வேறு வேறாக முடிகிறது? உதாரணத்திற்கு ஜிடிபி தரவரிசையில் அமெரிக்கா 21வது இடம், ரஷ்யா 52, சீனா 79, பிரேஸில் 87, இந்தியா 132. இந்த முரண்பாடுகள் அரசுகள் வகுக்கும் கொள்கைகளின் முன்னுரிமை குறித்து விவாதத்தை எழுப்ப முடியும்.

பொருளாதார வளர்ச்சி மட்டுமே ஒரு நாட்டின் வளர்ச்சி ஆகாது; நாட்டு மக்கள் மற்றும் அவர்களின் ஆற்றல்கள் நாட்டின் வளர்ச்சியை அளவிடுவதற்கு முக்கிய காரணியாக இருக்க வேண்டும். அந்த இலட்சியத்தை நோக்கமாகக் கொண்டு 1990–ல் ஐக்கிய நாடுகள், மனித வளர்ச்சிக் குறியீடு (HDI) என்ற அளவீட்டு முறையை உருவாக்கியது.

**இந்த தலைப்பின்கீழ் நான்கு பிரதானமான வளர்ச்சி பகுதிகள் உண்டு. அவை, குழந்தைகளின் சராசரி பள்ளி ஆண்டுகள், எதிர்பார்க்கப்படும் பள்ளி ஆண்டுகள், பிறந்த குழந்தைகளின் உயிர் வாழ்க்கை எதிர்பார்ப்பு மற்றும் ஒட்டு மொத்த தனிநபர் தேசிய வருவாய். இந்த அனைத்துச் சுட்டு எண்களில் 2022ம் ஆண்டில் 191 நாடுகளில் இந்தியாவின் தரவரிசை 132. அதற்கு முந்தைய ஆண்டின் 130வது இடத்திலிருந்து மேலும் இரண்டு இடங்கள் சரிந்து 132வது இடம்.**

எதார்த்தம் இவ்வாறு இருக்க அதே நேரத்தில் நாட்டின் பிரதமர் 5 லட்சம் கோடி டாலர்கள் பொருளாதாரமாக இந்தியாவைக் கட்டி அமைத்து வருவதாக டமாரமடிப்பது பெரும் வியப்பு. இது வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டது இல்லை என்பது வெளிப்படை.

## விடுதலையே வளர்ச்சியாக

பொருளாதார அறிஞர் அமர்தியா சென் 'வளர்ச்சி என்பது விடுதலை என்ற தமது நூலில் கூறுவார்: "விடுதலை என நான் குறிப்பிடுவது வளர்ச்சி குறித்த பரந்த கண்ணோட்டத்தைப் படம் பிடிக்கும் முயற்சியாகும்; அது வழக்கமான, குறுகிய முறையில் வரையறுக்கப்படும் பொருளாதார இலக்குகளுக்கு மாறானது.

இந்தச் சுதந்திரம் ஒரு வகையில் 'பெரிதினும் பெரிது கேட்கும்' பேராசை இலக்கு; காரணம், இதில் மனித ஆற்றல்களின் சாத்தியப்பாடுகளை நோயிலிருந்து விடுதலை மற்றும் கல்வியிலா அறியாமையிலிருந்து விடுதலை போன்ற சாத்தியப்பாடுகளை உள்ளடக்கியது: இதில் அடையும் வளர்ச்சி மேம்பாடு தனிநபர்களுக்கு நன்மை, அதே நேரதில் சமூகங்களுக்கும் நன்மையானதாகும்"

## பரிதாபகரமாக இந்தியா 132வது இடத்தில்

2021ல் இந்தியாவின் மனித வளர்ச்சிக் குறியீட்டின் நான்கில் மூன்று காரணி அளவீடுகளில் வீழ்ச்சி அடைந்துள்ளது, ஒன்றில் மட்டும் சிறிதளவு முன்னேற்றம். கல்வியைப் பொருத்தவரை இரண்டு காரணிகள். ஒன்று எதிர்பார்க்கப்படும் கல்வி ஆண்டுகளில் வீழ்ச்சி, இருப்பினும் சராசரி பள்ளி ஆண்டுகளில் உயர்வு காணப்படுகிறது. பின்னர் வாழ்க்கைத் தரம் உள்ளது அதில்தான் ஒட்டுமொத்த தேசிய வருமானம் (நிமிமி), தனிநபர் வருமானம் வருகிறது. இந்தியா இதில் 6590 லிருந்து 6581 டாலராகச் சரிந்துள்ளது, அதாவது வருமானம் குறைந்துள்ளது.

எதிர்பார்க்கப்படும் பள்ளி ஆண்டுகள் 11.9 ஆண்டுகளை ஒப்பிட, சராசரி பள்ளி ஆண்டுகள் மனித வளர்ச்சி குறியீட்டின்படி வீழ்ச்சி அடைந்து 6.7 வருடங்களாக உள்ளது. இந்தியக் குழந்தைகள் சராசரியாகப் பள்ளிகளில் சென்று படிப்பது வெறும் ஆறு ஆண்டுகளுக்குச் சற்று கூடுதலாக இருப்பதைச் சமாதானம் கூறி மன்னிக்க முடியாது. ஸ்ரீலங்காவில் 10 ஆண்டுகளுக்கும் அதிகமாகவும், உலகின் பெரும்பாலான வளர்ந்த நாடுகளில் இந்தச் சராசரி 12 ஆண்டுகளுக்கு அதிகமாகவும் உள்ளது.

பெருந்தொற்று குழந்தைகளின் கல்வியைக் கடுமையாகப் பாதித்த பிறகும் கல்விக்கு அரசு செலவிடுவது தொடர்ந்து வெட்டப்படுகிறது. கல்வி என்பது உற்பத்தி ஆற்றல், அது மனித மூலதனத்தை உற்பத்தி செய்கிறது. இந்தியா கல்விக்குச் செலவிடுவது மிகக் கூடுதலாக அதிகரிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. பாஜக 2014 தேர்தல் அறிக்கை ஜிடிபியில் 6 சதவீதம் கல்விக்குச் செலவிடப்படும் என வாக்குறுதி அளித்தது.

ஆனால் அதன் ஆட்சியின் சாதனை கல்விக்கு மூன்று சதவீதத்திற்குக் குறைவாகவே செலவிடுவதாக உள்ளது. கோவிட் 19 பெருந்தொற்று கல்வியில் ஏற்படுத்திய சீர்குலைவு மாணவர்களின் கல்வியில் இழப்பு மற்றும் பள்ளி இடைநிற்றல் விகிதம் அதிகரிப்பு எனக் கடுமையாக பாதித்துள்ள நிலையில் 2022 பட்ஜெட்டில் கல்விக்கான ஒதுக்கீடு ரூ.6ஆயிரம் கோடி வெட்டப்படுவது எவ்வளவு குரூரமானது?

கேந்திரமான பகுதிகளான சுகாதாரம், கல்வி மற்றும் விவசாயம் இவற்றிற்குப் பட்ஜெட் நிதி ஒதுக்கீடு கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து குறைக்கப்பட்டு வருகிறது. இப்பிரிவுகளில் கரோனா கடும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்திய பிறகும் அரசு இப்பிரிவுகளில் செலவிடுவது மட்டும் வெட்டிக் குறைக்கப்படுகிறது.

## வேலை வாய்ப்பு இல்லாத வளர்ச்சி

ஒரு சதவீத பொருளாதார வளர்ச்சியுடன் வேலைவாய்ப்பு விகிதம் எவ்வளவு சதவீதம் மாற்றமடைகிறது என்ற அளவீட்டை வேலைவாய்ப்பு நெகிழ்ச்சி என்று கூறுவர். இந்திய ரிசர்வ் வங்கி 2022ம் ஆண்டில் நாட்டின் வளர்ச்சி 8சதவீதமாக மதிப்பீடு செய்துள்ள போது வேலை கிடைக்கும் விகிதம் வெறும் 0.01 சதவீதமாக உள்ளது.

அதன் பொருள், பொருளாதாரம் வளர்ந்தாலும் வேலைவாய்ப்பு வீழ்ச்சி அடைகிறது என்பதே. ஒரு பொருளாதாரம், அதன் வளர்ச்சி நிகழ்முறையில் தனது மக்களுக்கு எந்த அளவு வேலைவாய்ப்புகளை உண்டாக்கித் தரும்

தொடர்ச்சி 4ம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 47

## பொறுப்பை உணருமா மின்சாரத் துறை?

சென்னை பெரும்பாக்கத்தில், மின்கம்பி அறுந்து விழுந்து ஒருவர் உயிரிழந்திருக்கிறார். இறந்து போன இஸ்மாயிலுக்கு 40 வயதே ஆகியிருக்கிறது. குழந்தைகளைப் பள்ளியில் விட்டுவிட்டு, தனது இரு சக்கர வாகனத்தில் வந்த போது, என்ன நடந்தது என்றே தெரியாமல் கம்பி விழுந்து மின்சாரம் பாய்ந்து அவருக்கு மரணம் ஏற்பட்டிருக்கிறது. தள்ளுவண்டிக் கடை நடத்தி தம்மை காப்பாற்றியவரை இழந்து கதியற்று கலங்கி நிற்கிறது அந்தக் குடும்பம். மின் கம்பியின் மற்றொரு முனை விழுந்து ஒரு நாயும் இறந்திருக்கிறது.

இது நிகழ்ந்து ஒரு மணி நேரம் கடந்தும் மின்வாரிய ஊழியர்கள் வராததால், பொதுமக்கள் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தி இருக்கின்றனர். இறந்த இஸ்மாயில் குடும்பத்திற்கு இழப்பீடு கோரியுள்ளனர். இது போல மின்கம்பிகள் தளர்வது பலமுறை நடந்து விட்டதாக பொதுமக்கள் கூறிய போது, அப்படி ஏதும் புகார் வரவில்லை என தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக (டான்ஜெட்கோ) அதிகாரிகள் பொறுப்பில்லாமல் பதில் அளித்துள்ளனர்.

மின்சாரம் தாக்கி, டான்ஜெட்கோ ஊழியர்கள் உயிர்ப் பலியாவதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. சராசரியாக மாதத்துக்கு ஆறு பேர் உயிரிழப்பதாக செய்திகள் வருகின்றன. ஊழியர்களுக்கு பாதுகாப்பு குறித்த வகுப்புகள் எடுக்கப்படுவதாகவும், பாதுகாப்பு கருவிகள் வழங்கப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது வழக்கமாக கூறப்படும் மழுப்பல் பதில்தான். தான் சாக வேண்டும் என எந்த ஊழியரும் விரும்பப் போவதில்லை.

டான்ஜெட்கோவில் 56,000 பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. மின்கம்பத்தில் ஏறி மின்கம்பிகளைப் பொருத்துவதும், சரி செய்வதும் மிக அபாயகரமான பணியாகும் தொடர்ந்து பணிபுரிந்து அனுபவம் பெற்றவர்களுக்கே அந்த பணியை செய்யும் லாவகம் கைவரும்.

'கேங்மேன்'என்ற பெயரில் 9,600 பேர் சில ஆண்டுகளுக்கு முன்பு நியமனம் செய்யப்பட்டனர். இவர்களுக்கான வேலையே வேறு. மின்கம்பத்தில் ஏறிச் செய்யும் பணிக்கும் இவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் ஆள் பற்றாக்குறை இருப்பதால், எந்த அனுபவமும் அதற்கானபணித்திறனும் இல்லாத கேங்மேன்களை, மின் கம்பத்தில் ஏறச்சொல்லி அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர். இவர்களும் வேலை போய் விடக்கூடாது எனும் அச்சத்தில் தமக்குத் தெரியாத பணியைச் செய்ய, மின் கம்பத்தில் ஏறி உயிரையே இழக்கின்றனர்.

இவை பற்றி எல்லாம், நிர்வாகத்திடம் தொழிற்சங்கங்கள் பலமுறை முறையிட்டுள்ளனர். ஒரு கட்டத்தில் 2023 ஜனவரி 10ம் நாளன்று, வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்து முன்னறிவிப்பும் தந்து விட்டனர். நிர்வாகம் நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்று, வேலைநிறுத்தத்தை நிறுத்தி வைத்துள்ளது.

புதிய அரசு பதவி ஏற்ற பின்பு ஒன்றரை லட்சம் விவசாய பம்ப்செட் மின் இணைப்புகள் தரப்பட்டது பாராட்டத்தக்கது. ஆனால் இவ்வளவு பெரிய பணிக்காக மின்சாதனம் எதுவும் வாங்கப் படவில்லை; ஒரு புதிய ஊழியர் கூட நியமிக்கப்படவில்லை. இது எப்படி சாத்தியம் என்று புலப்படவில்லை.

ஒன்றிய அரசு கையாளும் கொள்கைகள், தனியார்மயத்துக்கு முற்றிலும் ஆதரவாகவும், தொழிலாளர் நலன்களுக்கு நேர் விரோதமாகவும் உள்ளன என்பதில் எந்த ஐயமும் இல்லை அதே போல 'கேங்மேன்' நியமனங்கள் எல்லாம் அஇஅதிமுக ஆட்சி காலத்தில் போடப்பட்டன என்பதும் உண்மை.

டான்ஜெட்கோ நட்டத்தில் இயங்குவதும் உண்மையே. 85 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள 2 1/2 லட்சம் டன் நிலக்கரி காணாமல் போய் இருப்பதாக சொல்லப்படுகிறது. தனியாரிடம் அதிக விலைக்கு மின்சாரம் வாங்கியதும் காரணமாக உள்ளது. இதுவும் சென்ற ஆட்சி காலத்தில் நடந்ததுதான்.

ஆனால் இவற்றை எல்லாம் காரணமாகச் சொல்லி, ஆண்டுக்கு 100 பேர் வரை செத்துக் கொண்டிருப்பதையும், பொதுமக்களுக்கு ஏற்படுகிற உயிர் ஆபத்தையும் காண மறுத்து கண்ணை மூடிக்கொண்டு கடந்து செல்லக் கூடாது.

நட்டத்தை ஈடுகட்ட, சம்பளமாக செலவிடும் தொகையை குறைப்பதற்காக, நிரந்தர தொழிலாளர்களே இல்லாமல், அனுபவமும் திறனுமற்றவர்களைக் கொண்டு, உயர்திறன் உள்ள பணியை செய்ய வைப்பது சரியல்ல.

தமிழ்நாடு அரசு இந்த பிரச்சனையில் அக்கறை காட்டி, உயர் முன்னுரிமை தந்து, உரிய தீர்வுகாண உடனடி நடவடிக்கை எடுப்பது அவசர அவசியம்.

**திருத்தம்: சென்ற இதழ் தலையங்கத்தில் "ஈரோடு கிழக்கு" தொகுதி என்பதற்கு பதிலாக "கோவை கிழக்கு" தொகுதி என்று அச்சாகி உள்ளது. தவறுக்கு வருந்துகிறோம்.**

# தரணி சர்க்கரை ஆலையை திறந்திடுக! தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்



தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் என்றாலே கரும்பு விளையும் பூமி என்று சொல்வார்கள். இங்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு உருவான தனியார் தரணி சர்க்கரை ஆலை இப்போது விவசாயிகளுக்கு ரூ.25 கோடி கடன் பாக்கி வைத்து விட்டு ஆலையை மூடி விட்டது.

ஆலையின் அராஜ போக்கை கண்டித்தும் கரும்பு விவசாயிகளின் நலன் கருதி ஆலையை திறந்திடு. தரணி ஆலை நிர்வாகமே விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையை வட்டியுடன் வழங்கிடு. பணி புரிந்த காலத்தில் சம்பள பாக்கிய உடனே வழங்கடு என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் வட்டார விவசாய சங்க தலைவர் வீ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய செயலாளர் ப.வேலு, நகரசெயலாளர் வி. சின்னவேலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிபிஐ மாவட்ட செயலாளர் ஜி . இசக்கித்துரை, ஏஐடியூசி மாவட்டபொதுச்செயலாளர் ஜி. சுப்பையா, வி.ச. மாவட்ட செயலாளர் எஸ். வேலாயுதம், வி.தொ.ச. மாவட்ட பொருளாளர் பி.முருகன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ். மாரியப்பன், எம். எஸ். கிட்டப்பா, ஆர். சமுத்திரக்கனி உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றினர்.

3ம் பக்கத் தொடர்ச்சி

திறன் உடையதாக இருக்கிறது என்பதை அது சுட்டிக் காட்டுகிறது.

இந்த வகையில், குறிப்பாக உலகளாவிய போட்டி நடைபெறும் முக்கியமான ஆண்டுகளில் இந்தியா மிக மோசமாகச் செயல்படுகிறது.

### முன்னுதாரண மாற்றமே இத்தருணத்தின் தேவை

சுழன்றடிக்கும்வேலையில்லா திண்டாட்டத்துடன் போராட இப்போதைய தேவை வேலைவாய்ப்பு உருவாக்கமே. அதற்குத் தேவை ஒரு கொள்கை மாற்றம். அதனை பாஜக ஒருபோதும் புரிந்து கொள்ளத் தயாராக இல்லை. ஏழ்மையைக் குறைக்க வேலைவாய்ப்பை உருவாக்கும் "ஊதிய பொருள் முதலீடு மாடல்" என்ற கோட்பாட்டு பொருளாதாரத் தியரிகள் உள்ளன.

ஊதிய பொருள் முதலீடு மாடல் இந்தியாவில் இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டு திட்ட முக்கிய காலகட்டத்தின்போது அமலாக்கப்பட்டது. ஆனால் தற்போது மூலதனப் பொருட்களில் திரட்சியாகக் குவிக்கப்படும் முதலீடு வளர்ச்சியை பலூனாக ஊதிப்பெருக்கிக் காட்டுவதைத் தவிர, வேலைவாய்ப்பை உருவாக்குவதில்லை. இந்தியச் சமூக பொருளாதாரக் கட்டமைப்பில் மேம்படுத்தப்பட்ட நேருவின் வளர்ச்சி மாடலை நோக்கி ஓர் முன்னுதாரணமான மாற்றமே இன்றைய பிரச்சனைகளைத் திறன்வாய்ந்த முறையில் தீர்க்க முடியும். சமூகக் குறியீடு சுட்டிகள் இந்தியா துன்பத்தில் உழல்வதைக் காட்டுகின்றன. மகிழ்ச்சிக் குறியீடு தரவரிசையில் இந்தியா பரிதாபகரமான மதிப்பெண்களுடன் மீண்டும் ஒருமுறை வீழ்ச்சி அடைந்துள்ளது. தற்கொலை விகிதம் அதிகரிக்கிறது. தேசிய குற்ற ஆவண பீரோ தகவல்கள்படி விவசாயிகள் மத்தியில் தற்கொலை என்பதில் தற்போது அமைப்பு சாரா பிரிவு தொழிலாளர்களின் தற்கொலைகளும் சேர்ந்துள்ளதாகக் கூறுகிறது.

### வறுமை குறித்த ஆய்வின் வறுமை

இந்திய வறுமை விகிதம் குறித்த உண்மையான நிலையைப் படம் பிடித்துக் காட்ட முறையான கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. பன்முகப் பரிமாண ஏழ்மை 27.9 சதவீதம் நிலவுவதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன, தீவிர பன்முகப் பரிமாண ஏழ்மை 8.8 சதவீதம். இந்த விகிதமே உலகத் தரத்தின்படி மிக அதிகம். உலகில் இந்தியா மிகக் கடுமையான இல்லாமையில் இருப்பவர்களின் வாழ்விடமாக உள்ளது. கொள்கையில் சாரமற்ற வறட்சியே ஏழ்மை உண்டாக்குகிறது. தேடிக் கண்டு பிடித்தால் இதற்கான மிக முக்கிய காரணம், சமூகப் பிரிவு மற்றும் உற்பத்தி பிரிவில் செலவிடுவதில் போதாமையே ஆகும்.

மருத்துவச் சுகாதாரச் செலவுகளால் ஏழ்மை நிலை மோசமடைகிறது என்கிறது ஓர் ஆய்வு. சாதாரணமான பொது மக்கள் 70லிருந்து 75 சதவீதம் உடல்நலனுக்காக நேரிடையாக தன் கையிலிருந்தே மருத்துவச் செலவுகள் செய்ய நேர்வது அவர்களின் வறுமையை மேலும் தீவிரமாக்குகிறது. இதற்கு முக்கிய காரணம் பொது சுகாதாரத்தில் அரசு பற்றாக்குறையாகச் செலவிடுவதேயாகும்.

ஜிடிபி மற்றும் மனித வளர்ச்சிக் குறியீடு இடையேயான போக்கு குறித்த ஒட்டுமொத்த பருந்துப் பார்வை, வளர்ச்சி குறித்த கதையாடலில் சாதாரண மனிதன் ஓர் அங்கமாக இல்லை என்ற உண்மையை அம்பலப்படுத்துகிறது.

ஜிடிபிவளர்ச்சிகடைக்கோடி மனிதனின் வாழ்வில் பிரதிபலிப்பதில்லை. எனவே ஜிடிபி, இந்தியா போன்ற ஒரு நாட்டின் மனித வளர்ச்சியின் அத்தியாவசிய முக்கிய அம்சங்களைக் குறைப்பதாக முடிகிறது.

### வளர்ச்சியில் மனித வாழ்க்கை முக்கியம்

ஜிடிபி வளர்ச்சி அடைவதால் அது, ஜி20 போன்ற உலக ஆளுகைகளின் மேல் மட்டத்தில் இந்தியாவை வைக்க உதவிடலாம், ஆனால் அது மக்கள் சேவை ஆற்ற வேண்டிய பொருளாதாரம் அவர்களைப் பலி கொடுப்பதாகும். அத்தகைய கொள்கை வகுப்பு இன்னும் பல மக்களைத் தொடர்ந்து கீழே தள்ளி, கை விட்டுவிடும்.

இந்தப் புறக்கணிப்பு, பொருளாதாரம் அனைவரது நன்மைக்காக என்று மாறி மனித வாழ்வுகளில் நீண்ட காலத் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய மாறக்கூடிய அம்சங்களில் கவனம் செலுத்தி, சிக்கலான பிரச்சனைகளைத் தீர்க்க முன்வரும்வரை தொடரவே செய்யும்.

### மாற்றத்தை யார் ஏற்படுத்துவது?

ஜிடிபியின் வியப்பூட்டும் வளர்ச்சி எண்களைக் கண்டு ஏமாறாமல், மக்கள் உண்மையான வளர்ச்சி என்ன என்பதைப் பற்றிய புரிதல் உணர்வைத் திரட்டுவது முக்கியமானது. தாறுமாறான எண்களை இதயத்தில் வைக்காமல், அங்கே மக்களை வைத்து, மக்களை மையமாகக் கொண்ட வளர்ச்சி மாடலைக் கண்டறிய வேண்டிய நேரம் வந்து விட்டது.

ஜிடிபி அதிகரிப்பிற்கும், மனித வளர்ச்சி குறியீட்டிற்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைத்து இணைக்க, சுகாதாரம், கல்வி போன்ற சமூகப் பிரிவுகளில் அரசுகள் எவ்வளவு தூரம் முதலீடு செய்கின்றன, அந்த முதலீடுகள் எவ்வாறு திறமையான முறையில் ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளாக மாற்றப்படுகின்றன என்பதில் அதற்கான தீர்வு உள்ளது. அப்படி செய்தால்தான் மனித வளர்ச்சிக் குறியீடு மேம்பாடு அடைவது, மேலான ஜிடிபி வளர்ச்சிக்கும் இட்டுச் செல்லும்.

எனவே, நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் செழுமைக்கும் உண்மையான வழி தேசிய வருமானத்தை அதிகரிப்பது, வருமான இடைவெளியைக் குறைப்பது, பாலின அசமத்துவத்தைக் குறைப்பது, மருத்துவ சுகாதாரம் மற்றும் கல்வி தரங்களை மேம்படுத்துவது, தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாப்பது என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசுகள் செயல்படுவதே ஆகும்.

மேற்கண்டவற்றைச் சாதிக்க அரசியல் உறுதிப்பாடு தேவைப்படுகிறது, அது அரசியல் சிந்தனை கோட்பாட்டுகளுடன் பிரிக்க முடியாதபடி தொடர்பு உடையது. இந்த வளர்ச்சி மாடலுக்கு நேர் எதிரிடையானது பாஜக அரசியல் கருத்தோட்டம். அந்தக் கட்சியின் கார்ப்பரேட் ஆதரவு மற்றும் முற்றதிகாரச் சிந்தனை கோட்பாடு அடிப்படையில் ஜனநாயக விரோதமானது.

இன்று ஜனநாயக ஆதார அடித்தளங்கள் சீர்குலைக்கப்படுவது அதிகரித்து வருவதை இந்தியா பார்த்து வருகிறது. செயல்படும், செழித்து வளரும் ஜனநாயகம் மட்டுமே மக்களை மையமாகக் கொண்ட வளர்ச்சியைக் கொண்டு வர முடியும்!

**நன்றி: நியூஏஜ்**
**தமிழில்: நீலகண்டன்**



- த.லெனின்

# அம்பலமாகும் மோடியின் தேர்தல் வெற்றி!

**விமர்சன ரீதியாக மோடி அரசை எதிர்ப்பவர்களை உளவு பார்க்க பெகாசஸ் மென்பொருளை பயன்படுத்தியது. அதில் வெளிப்பட்டு மோடியின் ஜனநாயக முகம் ஒரு பக்கம் கிழிந்தது. இந்துத்துவ மோடியின் குஜராத் படுகொலைகள் பி.பி.சி.யில் வெளிவந்து அவரது "விசுவகுரு பிம்பம்" கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி அவரின் மறுபக்க பிம்பமும் கிழிந்தது.**

இந்த ஆவணங்களின் உண்மைத் தன்மையை அல்லது அதன் கருத்துகளை எதிர்கொள்வதற்கு பதிலாக பி.பி.சி.யின் இந்திய அலுவலகங்களை தனது வழக்கமான வருமான வரி சோதனைகள் மூலம் எதிர்கொண்டது.

இப்போது இங்கிலாந்தில் இருந்து செயல்படும் மற்றொரு ஊடக குழுமமான "தி கார்டியன்" குழுமத்தால் மோடியின் தேர்தல் வெற்றிகள், வாக்கு எண்ணிக்கையில் மோசடி செய்து பிரதமராகி இருப்பதை ஆவணத்தோடு வெளியிட்டிருக்கிறது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றது இந்த செப்படி வித்தையின் மூலம்தான் என்பதை பல்வேறு ஆதாரங்கள் மூலம் அது விளக்கியுள்ளது.

கடந்த டிசம்பர் 2019ல் ஜனநாயக சீர்திருத்தத்திற்கான அமைப்பு உச்சநீதிமன்றத்தில் தொடுத்தது. 300க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பதிவான வாக்குகளை விட எண்ணிக்கை யின்போது அதிக வாக்குகள் இருந்தது கண்டறியப்பட்டது. இது குறித்துதான் அவ்வமைப்பு வழக்கு தொடர்ந்தது.

கொரோனா பெருந்தொற்றை காரணம் காட்டி இந்த வழக்கை தள்ளிவைத்தது உச்சநீதிமன்றம்.

ஏறத்தாழ அந்த வழக்கின் அடிப்படை யில்தான் இந்த உண்மைகளை இன்று "தி கார்டியன்" பத்திரிகை வெளி யிட்டிருக்கிறது.

எப்போதுமே பாசிஸ்ட்டுகள் பொய்யை உண்மை போல பேசுவதும், கருத்துக்களை உருவாக்குவதிலும், திரிப்பதிலும் கை தேர்ந்த பொய்யர்கள்!

அதை இன்றைய நவீன தகவல் தொழில்நுட்ப யுக்திகளை கையாண்டு சமூக வலைதளங்களில் பரப்புவதே பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளின் கை தேர்ந்த வேலை!

"டீம் ஜார்ஜ்" என்ற பெயரில் தனது அடையாளங்களையெல்லாம் மறைத்து, கூலிக்கு செயல்படும் ஒரு இஸ்ரேலிய நிறுவனம்தான் மோடியின் இந்த தகிடுதித்த தேர்தல் வெற்றிகளுக்கெல்லாம் காரணம் என்பதை வெளிப்படுத்தி இருக்கிறது.


அந்த கற்பனை நபரின் தொலைபேசி எண் இந்தோனேசியாவில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதில் மூன்று புகழ்பெற்ற பத்திரிகையாளர்கள் பணியாற்றுகிறார்கள்.

தி மேக்கர் பத்திரிகையின் புலனாய்வு செய்தியாளர் கர் நெகிடோ, ரேடியோ பிரான்சின் செய்தியாளர் பிரடரிக் மெடசின், ஹாரேட்ஸ் பத்திரிகையின் ஓமர் பெஞ்சகாப் ஆகியோர் இதில் பணி புரிகின்றனர்.

இப்படி 30 நாடுகளில் தேர்தல் காலங்களில் பொய் செய்திகளை பரப்புகிற எந்திரமாகவும், தரவுகளைத் திருடி அதோடு பொய்களை நுழைத்து எதிராளிகள் மீது அவதூறு பிரச்சாரம் மேற்கொண்டதும் இப்போது வெளிப்பட்டிருக்கிறது.

தரவுகள் திருடுவது மோடி ஆட்சிக்குப் பிறகு மிகப்பெரிய அளவில் அதிகரித்தது. அதுவும் புதுச்சேரி தேர்தலில் யாரெல்லாம் ஒன்றிய அரசின் திட்டங்களில் பயனாளிகளாக இருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் பா.ஜ.க.விற்கு வாக்களிக்குமாறு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டதை நாம் அறிவோம்.

மோடியின் டுவிட்டர் பக்கத்தில் 60%க்கு மேல் போலியான முகவரியில் உள்ளவர்களே பின்தொடர்வதும் வெளியாகி உள்ளது. ஏறத்தாழ 18 போலி டுவிட்டர் கணக்குகள் மூலம் தொடர்ந்து பொய் செய்திகள் அனுப்புவது வெளியாகியது. எதிர்க்கட்சிகள் மீது தேசத்துரோக குற்றச்சாட்டுகளை முன்வைப்பது, கட்டற்ற அவதூறுகளை கற்றை கற்றையாக வெளி




யிடுவது என்பது போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகள் இப்போதும் நடந்து வருகிறது.

அமுல்யா லியோனா பாகிஸ்தான் வாழ்க என்று கோஷமிட்டதாக திடீரென காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தியின் பாரத ஒற்றுமை நடைபயணத்தின்போது ஒரு பரபரப்பான செய்தி சமூக வலைத்தளத்தில் வெளியானது. இதனை பா.ஜ.க.வின் தலைவர்களும், அமைச்சர்களும் மறு பகிர்வு செய்ததும் நிவா ஜோகி என்ற கேரள மாணவர் சங்கத் தலைவர் இதுபோல பாகிஸ்தான் வாழ்க என்று கோஷமிட்டார். அவர், ராகுல்காந்தியின் பாரத யாத்திரையில் கலந்து கொண்டிருக்கிறார் என்றும் பரப்பப்பட்டது.

ராகுல்காந்தியின் தொகுதியான வயநாட்டில் அமைந்துள்ள அவரது அலுவலகம் இடதுசாரி மாணவர் அமைப்பால் தாக்குதலுக்கு உள்ளானது. அது குறித்து பத்திரிகையாளர்களிடம் பேசிய ராகுல்காந்தி அந்த சிறியவர்கள் செய்த செயலை நான் மன்னித்து விட்டேன் என்றார்.

ஆனால், இந்த மன்னிப்பை உதய்பூர் கொலையில் கொலையாளிகளுக்கு ஆதரவாகச் சொன்னதைப் போல பரப்பி விட்டனர். இவை எல்லாம் இஸ்ரேலின் டீம் ஜார்ஜ் ஏஜெண்டுகளின் வேலை.

இந்தியாவில் மிகத் துணிச்சலாக மோடியை விமர்சித்து பல செய்திகளை வெளியிட்ட என்.டி.டி.வி. அதானியால் கபளீகரம் செய்யப்பட்டது.

ஆனால், அதானி சாம்ராஜ்யம் ஹிண்டன் பார்க் நிறுவன ஆய்வால் ஆட்டம் கண்டு சரிந்து விழுந்தது.

**வரி ஏய்ப்பவர்களின் சொர்க்கமான மொரிசியஸ் தீவில் கவுதம் அதானியின் அண்ணன் மூன்றுக்கும் மேற்பட்ட போலி நிறுவனங்களை நடத்தி வருகிறார். அதன் மூலம் பல லட்சக்கணக்கான டாலர்களை சட்டவிரோதமாக இந்தியாவிற்கு மாற்றி அம்பலப்பட்டு போய் நிற்கிறார். மோடியின் தோன்றாத் துணைவனான இந்த அதானியின் அடாத செயலை சட்ட விரோத நடவடிக்கையை இன்றுவரை கண்டிக்கவோ கருத்துச் சொல்லவோ மறுக்கிறார் இந்தியப் பிரதமர்.**

நமது நாட்டில் சுதந்திரமாக இயங்கி வரும் வருமான வரித்துறை, அமலாக்கத்துறை, சிபிஐ போன்றவை கண்ணை, காதை, வாயை பொத்தி தங்களது விசுவாசத்தை தொடர்ந்து காட்டிக் கொண்டு இருக்கின்றன.

**நமது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் அடிப்படையில் இந்தியாவில் செயல்படும் அரசியல் கட்சிகள் 50% வெளிநாட்டு பங்கு மூலதனத்தோடு செயல்படும் நிறுவனங்களிடம் இருந்து நன்கொடை பெறுவதை தடை செய்து இருந்தது.**

**ஆனால், மோடி ஆட்சியில் நிதி சட்டம் 2016 ன் அடிப்படையில் 50%க்கு மேல் பங்குத் தொகை வைத்திருக்கும் வெளிநாட்டு நிறுவனங்களிடமும் தேர்தல் நன்கொடை பெறலாம் என்று மாற்றியது இந்த ஊழல் அறியாத உத்தம மோடி அரசு.**

பி.பி.சி. ஆவணங்களை வெளி யிட்டால் வெளிநாட்டு சதி. பெகாசஸ் ஊழல் வெடித்து கிளம்பினால் தன்னை தாக்கவந்த வெளிநாட்டு சதி என்று குறிப்பிடுவது பிரதமரின் வாடிக்கை. ஆனால் அவர் கடந்த செப். 2019ல் டெக்சாசில் அமைந்துள்ள ஹட்சன் நகரில் "ஹவுடி மோடி" என்ற நிகழ்ச்சியை நடத்தி வெளிநாட்டு வாழ் இந்தியர்களை டிரம்புக்கு ஆதரவாக திருப்புவதற்கான திருப்பணிகளை செய்தார்.

2020ல் அமெரிக்க குடியரசுத் தலைவர் தேர்தலில் அப்கி பார் டிரம்ப் சர்க்கார் என்ற வாசகத்தின் மூலம் அவர்களை மிகவும் கொடூரமான டிரம்புக்கு வாக்களிக்க வேண்டி பிரச்சாரம் செய்தார் மோடி.

இங்கிலாந்தின் தொழிலாளர் கட்சியை அங்குள்ள பா.ஜ.க. வெளிநாட்டு பிரிவு அமைப்பு ஜம்மு காஷ்மீர் பிரச்சினையில் அக்கட்சி தலையிட்டால் இங்கிலாந்தில் உள்ள இந்திய வம்சாவளியினர் அனைவரையும் தொழிலாளர் கட்சிக்கு எதிராக வாக்களிக்க வைப்போம் என்று பிரகடனம் செய்தது.

இதுபோல சங்கப் பரிவாரங்களின் பல்வேறு அமைப்புகள் இந்தியர்கள் அதிகம் வாழும் பிஜி தீவிலும் அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் தன் கை வேலைகளை தொடர்ந்து செய்து வருகிறது.

இவர்கள் வெளிநாட்டில் பணியாற்றலாம். வெளிநாட்டு தலைவர்களுக்கு தேர்தல் பிரச்சாரம் செய்யலாம். ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் பா.ஜ.க.வும் உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் செயல்படலாம், அரசியலில் தலையிடலாம். ஆனால், இந்தியாவில் யாரேனும் குறை கூறினால் அவர்களை வெளிநாட்டு கை கூலி என்று வசை பாடுகின்றனர். என்னே பெருந்தன்மை.

இஸ்ரேலின் டீம் ஜார்ஜ் இந்தியாவின் மோடியின் தேர்தல் வெற்றிக்காக எப்படியெல்லாம் செயல்பட்டிருக்கிறது என்று இப்போது வெளியாகி இருக்கிறது. ஜார்ஜ் என்பவர் உண்மையில் டால் ஹனான் என்று அறியப்படுறார். அவரது வாழ்க்கை வரலாறு நோர்கி நிறுவனத்தில் இணையதள பக்கத்தில் உள்ளது.

அதனுடைய தலைவர் மெமோ மென் ஆவார். இது ஒரு இஸ்ரேல் நாட்டு கம்பெனி என்று தன்னை சொல்லிக் கொள்கிறது. இந்த நிறுவனம்தான் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இந்தியா உள்பட பல நாடுகளுக்கு துப்பு துலக்கும் நிறுவனமாகவும் செயல்படுகிறது. பொய்ச் செய்திகளை திட்டமிட்டு பரப்பும் நிறுவனம் ஆகவும், செய்திகளை திரித்துக் கூறுவதில் அரசியல் ரீதியாக தன்னை அமர்த்தியவர்களுக்கு பெரும கைமாறு செய்யும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் உள்ளூர இது கொண்டுள்ளது.

முன்னாள் ராணுவத்தினராக அறியப்பட்ட அந்த நபரோடு மிக நெருக்கமாக செயல்பட்டவர்தான் நோரிகா. அவரைத் தொடர்பு கொண்டு ஜோர்ஜ் பற்றிய செய்திகளைக் கேட்டால் தனக்கு தெரியாது என்று மறுக்கிறார் ரோகர் நொரிகா. இவர் வேறு யாரும் அல்ல.

உலகமறிந்த கொடூரமான வலதுசாரியான டபிள்யூ புஷ் ஆட்சி காலத்தில் அவரோடு நெருக்கமாக இருந்தவர் தான் இவர்.

இந்த உண்மை சொரூபிகள்தான் இந்தியத் தேர்தல்களில் தலையீடு செய்து மிகவும் பிற்போக்கான வலதுசாரி பாசிச பா.ஜ.க.வை ஆட்சிக் கட்டிலில் அமர வைத்திருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் பேசும்போதுகூட மோடி அதானியின் ஊழல் குறித்து வாய் திறக்க மறுத்துவிட்டு 140 கோடி மக்களின் உணர்வுகள் தன் மீது ஒரு உறையாக இருந்து நின்று எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களை தாங்குகிறது என்று திருவாய் மலர்ந்தார். திகிடு தத்தங்கள் ஒவ்வொன்றாய் வெளி வருகின்றன.

உண்மை ஒருநாள் வெளியாகும். அதில் பொய்யும் புரட்டும் பலியாகும் என்பதற்கு இணங்க பா.ஜ.க. இனி ஒவ்வொன்றிலும் அம்பலமாகும்.

தொடர்புக்கு: 94444 81703

மக்களிடமிருந்து கற்போம்; மக்களுக்காக போராடுவோம்!

# கோவையில் 483 ஜனசக்தி சந்தா வழங்கும் நிகழ்ச்சி



பொதுச் செயலாளர் டி.ராஜா உரை





இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட அளவிலான பேரவை கூட்டம் மற்றும் ஜனசக்தி சந்தா வழங்கும் நிகழ்ச்சி கடந்த 12ஆம் தேதி வடகோவை குஜராத் சமாஜ் கூட்ட அரங்கத்தில் கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட முழுவதும் இருந்து வசூலிக்கப்பட்ட ஜனசக்தி ஆண்டு சந்தா 483 மற்றும் மாத சந்தா 150 இவற்றுக்கான தொகை ரூ.2 லட்சத்து 96 ஆயிரத்து 325 மாநில செயலாளர் இரா.முத்தரசனிடம் வழங்கப்பட்டது. கட்சியின் மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் மௌனசாமி ஆகியோர் வழங்கினர். இந்த பேரவை கூட்டத்தில் கட்சி தோழர்களிடமிருந்து கட்சி நிதியாக ரூ. 44 ஆயிரத்து 800 வசூல் ஆனது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா பேசும்போது மக்களிடமிருந்து கற்போம் மக்களுக்காக போராடுவோம் என்று குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது "கடந்த ஆண்டு அக்டோபரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு விஜயவாடாவில் நடைபெற்றது. அதில் பல்வேறு அரசியல் நிலைமைகள் குறித்து விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

உலக முதலாளித்துவம் பெரும் நெருக்கடியை சந்தித்து வருகிறது. இது ஏதோ ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் என்பதல்ல. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல பாகிஸ்தானில், நேபாளில், இந்தியாவிலும் கூட பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவில் பொருளாதார நெருக்கடி இல்லை என்று யாரும் கருதி விடக்கூடாது. இங்கிலாந்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது.

அமெரிக்காவிலும் இந்த பொருளாதார நெருக்கடி இருக்கிறது. இந்த நெருக்கடிகளுக்கு தீர்வு என்ன ? உலகம் ஒரு கம்யூனிஸ்ட் புரட்சியை கண்டு நடுங்குகிறதா? தென் அமெரிக்கா நாடுகளில் அடுத்தடுத்து இடதுசாரி ஆட்சிகள் அமைந்து வருகின்றன.

தோழர்கள் இரா.முத்தரசன், நா.பெரியசாமி ஆகியோர் குறிப்பிட்டதை போல நமது கட்சிக்கு 100 வயது ஆகப்போகிறது. 1925ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டது. நாட்டின் முன்னேற்றத்திற்காக, சுதந்திரத்திற்காக கம்யூனிஸ்ட் கட்சியை போல போராடிய கட்சி எதுவும் இருக்க முடியாது.

இந்தியா ஒரு பாராளுமன்ற ஜனநாயக நாடு என்பதை ஏற்றுக் கொண்ட கட்சி நம்முடைய கட்சி. 1952ல் இருந்து நாம் தேர்தலில் பங்கேற்று வருகிறோம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் நாம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி என்ற நிலையில் இருந்தோம்.

நாம் கட்சி தொடங்கிய அதே1925ம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். அதன் அரசியல் பிரிவு பி.ஜே.பி. இன்றைக்கு ஆட்சியை பிடித்து விட்டது.

ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை கூறுகளை தகர்த்தெறிவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்தியாவின் ஜனநாயக தன்மையை, மதச்சார்பற்ற தன்மையை, பன்முக தன்மையை, கூட்டாட்சி நெறிமுறைகளை தகர்த்து விட வேண்டும் என்று முயற்சித்து வருகிறது.

இந்தியாவை ஒரு ஒற்றை சித்தாந்தத்தின் கீழ், ஒற்றை பரிமாணத்தின் கீழ் இருக்கிற நாடாக மாற்ற வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். முயற்சிக்கிறது. இது முறியடிக்கப்பட வேண்டும், சமீப காலமாக மதவெறி அரசியல் பகிரங்கமாக பேசப்படுகிறது. பாசிஸ்ட் கொள்கைகள் பகிரங்கமாக பேசப்படுகிறது. அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து கம்யூனிஸ்டுகள் சிந்திக்க வேண்டும்.

மக்களுடைய வாழ்வாதார பிரச்சனைகள் 1.எல்லோருக்கும் உழைப்பு, வேலை. 2.எல்லோருக்கும் கல்வி, 3. எல்லோருக்கும் வீடு இவை எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக கம்யூனிஸ்டுகள் மக்களை திரட்டி போராட வேண்டும். கம்யூனிஸ்ட்கள் மக்களோடு இருக்க வேண்டும்.

தோழர். லெனின் குறிப்பிடுகிறார் 'நாம் மக்களிடமிருந்து கற்றுக் கற்க வேண்டும், மக்களை வழிநடத்த வேண்டும்,'

மாசேதுங், 'கம்யூனிஸ்டுகள் கம்யூனிஸ்ட்களாக உயிர்ப்போடு இருக்க வேண்டும் என்றால் நீரில் வாழ்கிற மீன்களைப் போல அவர்கள் இருக்க வேண்டும்' என்கிறார்.

சாதியக் கொடுமைகள், ஆனாதிக்க கொடுமைகள் இவற்றை எதிர்கொள்கிற வகையில் மார்க்சிய – லெனினிய சித்தாந்த்தை நடைமுறையை சூழலில் நாம் பயன்படுத்த வேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் மாஸ்கோவில் ஸ்டாலினை சந்தித்து பேசி இருக்கிறார்கள். ஸ்டாலின் அவரிடம் மார்க்சிசம், லெனினிசம் என்பதை உங்களது சமூக சூழலில் எப்படி செயல்படுத்த வேண்டும் என்பதை நீங்கள் முடிவு செய்து செயல்படுத்துங்கள் என்று கூறியிருக்கிறார்.

நாம் மக்கள் பிரச்சினைகளை முன்னெடுத்து, மக்களோடு வாழ்ந்து, மக்களுக்காக போராடி, மக்களிடமிருந்து கற்று, மக்களுக்கு தலைமை ஏற்க வேண்டும். நாட்டை வழிநடத்த வேண்டும் என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜா பேசினார்.

முன்னதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர் நா. பெரியசாமி, மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் ஆகியோர் பேசினர்.

இந்தப் பேரவை கூட்டத்திற்கு கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி தலைமை தாங்கினார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் கே.எம்.செல்வராஜ், வி.எஸ்.சுந்தரம், ஜே.ஜேம்ஸ், சி.தங்கவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கட்சியின் மாவட்ட துணை செயலாளர் மு. குணசேகர் நன்றி கூறினார்.

### "இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி உதயம்" நூல் வெளியீடு

இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி உதயம் என்ற நூலை கோவையில் நடைபெற்ற பேரவை கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா வெளியிட்டார். இந்த நூலை மூத்த தோழர் வழக்கறிஞர் கே.சுப்பிரமணியம் தொகுத்துள்ளார். இந்த நிகழ்வின் போது மாநில செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி, மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்டத் துணைச் செயலாளர் மௌன.குணசேகர், மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், கே.எம்.செல்வராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

# நெல் கொள்முதலில் அதிகாரிகள் நடவடிக்கையே ஊழலுக்கு காரணம்!

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஏஐடியூசி கண்டனம்!

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக ஏஐடியூசி தொழிற்சங்க மாநில பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார் பத்திரிகைகளுக்கு விடுக்கும் அறிக்கை:

நெல் கொள்முதலில் உள்ள ஊழல் குறைபாடுகள் களையப்பட வேண்டும் என்று விவசாயிகள் மற்றும் பல்வேறு தரப்பினர்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர். செய்தி , ஊடகங்களில் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. ஊழலுக்கு அடிமட்ட ஊழியர்கள் தான் காரணம் என்று அதற்கு மேல் உள்ள அனைவரும் தூய்மையானவர்கள் என்ற அடிப்படையில் 90 கொள்முதல் பணியாளர்கள் நிரந்தரமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு எதிர்கால வாழ்க்கை பறிக்கப்பட்டுவிட்டது.

நெல் மூட்டைகளை கொள்முதல் நிலையத்திலிருந்து இயக்கும் பொறுப்பை சரிவர நிறைவேற்றாததால் கடந்த காலங்களில் பெரும் அளவிற்கு இழப்பு ஏற்பட்டது. அந்த இழப்புக்கு பொறுப்பான அதிகாரிகள் இது குறித்து அரசுக்கு உண்மை நிலையை விளக்கி அந்த இழப்பை ஏற்க செய்வதற்கு பதிலாக தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காக அவர்களே முன்னின்று நெல் கொள்முதல் பணியாளர்களிடம் பணியில் சேரும்போதே லட்சக்கணக்கில் ரெக்கவரி வசூலிக்கின்றனர். மேற்கண்ட தொகையை செலுத்தினால்தான் மீண்டும் வேலை என்ற கட்டப்பஞ்சாயத்து முறையை கடைபிடிக்கின்றனர். இதனால் பணத்தை செலுத்தியவர்கள் இதனை ஈடுகட்ட அடுத்து விவசாயிகளிடம் கையேந்துகின்றனர். ஊழலின் ஊற்று கண்ணை அதிகாரிகளே திறந்து விடுகின்றனர்.

அதிகம் ரெக்கவரி வசூலித்த திருவாரூர் மாவட்டத்தில் தற்போது ஆயிரக்கணக்கான மூட்டைகள் இயக்கம் செய்யப்படாமல் கொள்முதல் நிலையங்களில் தேக்கம் ஏற்பட்டுள்ளது.

கொள்முதலில் டெல்டா மாவட்டங்களில் மட்டும் கடந்த இரண்டு ஆண்டுகளில் நெல் கொள்முதல் பணியாளர்களிடம் முதுநிலை மண்டல மேலாளர்கள் 18 கோடி ரூபாய் வசூலித்திருக்கிறார்கள். இதற்கு எந்த விசாரணையும் கிடையாது, எந்த ஆணையும் இல்லை. இவர்களுக்கு சட்டப்படியான உரிமையோ, அதிகாரமோ இல்லை. தன்னுடைய அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி பெருமளவிற்கு ஊழல் நடைபெறுவதற்கு இவர்கள் காரணமாக இருந்து வருகிறார்கள்.

பல கோடி ரூபாய் வசூலித்த மண்டல மேலாளர்கள் மீது தமிழ்நாடு முதலமைச்சர் நேரடியாக தலையிட்டு கடுமையான கிரிமினல் நடவடிக்கை எடுக்கவும் , நிர்வாகம் சட்டவிரோதமாக வசூலித்த பணத்தை சம்பந்தப்பட்ட பணியாளர்களிடம் திரும்ப வழங்கவும் வேண்டுகிறோம். பணியில் தவறிழைத்திருந்தால். உரிய விசாரணை செய்து,குற்றம் இழைத்தது நிரூபிக்கப்பட்டால் மட்டுமே இழப்பு தொகை வசூலிக்கப் பட வேண்டும் என்ற இயற்கை நீதி கோட்பாடுகளை கடைபிடிக்க வேண்டுகிறோம்.

இதே போன்று ஊழலுக்கு முக்கிய பங்கு வகிக்கின்ற குறிப்பாக ஆயிரக்கணக்கில் லாரி மாமூல் மூட்டை ஒன்றுக்கு குறிப்பிட்ட தொகை அதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டும் என்ற எழுதப்படாத ஒப்பந்தமும், ஆய்வு செய்ய வருகின்ற அதிகாரிகளை கவனிக்க வேண்டும் என்ற நடைமுறைகள் தொடர்ந்து கொண்டுதான இருக்கின்றன.

ஊழலுக்கு அடிப்படையான மேற்கண்ட முக்கிய பிரச்சினைகள் அதிகாரிகளின் ஆதரவோடு தொடர்கின்ற சட்ட விரோத நடவடிக்கைகளை அரசு முழுமையாக ஒழித்திட வேண்டும் என்று சி.சந்திரகுமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஒன்றிய அரசின் பட்ஜெட்டை கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

◆ நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் பகுதியில் மத்திய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பள்ளிபாளையம் நகர செயலாளர் பி.காமராஜ் தலைமை தாங்கினார்.

மாவட்ட செயலாளர் கே.அன்புமணி, மாவட்ட குழு உறுப்பினர் டி.கே.சுப்பிரமணி, மாதர் சம்மேளன மாநில குழு உறுப்பினர் ஏ.எம்.சரசு, திருச்செங்கோடு நகர செயலாளர் எஸ்.சுகுமார், துணை செயலாளர்கள் பி.கார்த்திக், எஸ்.தண்டபாணி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

◆ அரியலூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஏஐடியூசி சார்பாக அண்ணாசிலை அருகில் மாவட்டக்குழு உறுப்பினர் ஜி.ஆறுமுகம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் டி. தண்டபாணி கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் 100க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# கோவையில் உலகத் தாய்மொழி நாள் விழா

உலகத் தாய்மொழி நாள் விழா பிப்ரவரி 21 ல் கோவை பி. என். புதூர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது. ஆறு மாநகராட்சி பள்ளிகளைச சார்ந்த 90 மாணவ மாணவிகள் பேச்சு மற்றும் ஓவியப்போட்டிகளில் பங்கேற்றனர். தமிழ் எழுத்துக்களில் ஓவியம் வரைதல், தமிழின பெருமை குறித்த தலைப்பில் பேச்சு போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கோவை சினி ஆர்ட்ஸ் ஓவியர் குடியரசு தலைவர் விருது பெற்ற எழுத்தாளர் வே. ஜீவா பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.




இந்திய கலாச்சார நட்புறவு கழகத்தின் மாநில பொதுசெய்யலாளர் எஸ். ராதாகிருஷ்ணன், மாநில துணைத் தலைவர் வெ. சுப்பிரமணியன், இஸ்கப் மாவட்டச் செயலாளர் எம்.வி.ராஜன், எழுத்தாளர் கே. சுப்பிரமணியன், நாடக இயக்குனர் திலீப் குமார், கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் ப. பா. ரமணி, 41வது மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், சி.பி.ஐ. மேற்கு மண்டல செயலாளர் சந்திரன் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில துணை செயலாளர் அஷ்ரப் அலி, வங்கி அதிகாரிகள் சங்க தலைவர் சசிதரன், காப்பீட்டு கழக சங்க செயலாளர் கோபாலகிருஷ்ணன், பெருமன்ற மாவட்ட துணை தலைவர் ஆர். புருஷோத்தமன், பெருமன்ற துணை செயலாளர் எல். ஜான் ஆகியோர் பங்கேற்றனர். பெருமன்ற மேற்கு பகுதி செயலாளர் ஓவியர் செல்வின், பொருளாளர் ஞானகுமார், இஸ்கஃப் மாநில பொருளாளர் எஸ். கோட்டியப்பன் ஆகியோர் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தனர் .

# ஒகேனக்கல்லில் ஏஐடியூசி மசாஜ் தொழிலாளர்கள் சங்க பேரவை கூட்டம்

தருமபுரி: தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டம்ஒகேனக்கல்லில் ஏஐடியூசி மசாஜ் தொழிலாளர்கள் சங்க ஆண்டு பேரவை கூட்டம் நிர்வாகிகள் மாதேஷ் மற்றும் விஜயகாந்த் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி கலந்து கொண்டு சங்க செயல்பாடுகள் குறித்து விளக்க உரையாற்றினார்.சங்கத்தின் கவுரவ தலைவர்,வழக்கறிஞர் சி மாதையன்,முன்னாள் ஏஐடியூசி மாவட்டத்தலைவர் எம்.மாதேஸ்வரன், கட்டுமான தொழிலாளர் சங்க மாநில குழு உறுப்பினர் சுதர்சனம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி பேசினர். ஆண்டு பேரவை கூட்டத்தில் ஒகேனக்கல் ஏஐடியூசி மசாஜ் தொழிலாளர்கள் சங்க தலைவராக மாதேஷ்,துணைத் தலைவர்களாக விஜயகாந்த், சி மாது, செயலாளராக கோ.சந்திரசேகர்,துணை செயலாளராக பாரதிராஜா,பொருளாளராக பாபு மற்றும் சங்கத்தின் கௌரவத் தலைவராகவும், சட்ட ஆலோசகராகவும் வழக்கறிஞர் சி மாதையன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

# சாலையை சீரமைக்கக் கோரி மறியல் போராட்டம்

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் அடுத்த சிறுதாவூரில் சாலையை சீரமைத்திட கோரி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஆட்டோ தொழிற்சங்கம், இளைஞர் பெருமன்றம், மாணவர் பெருமன்றம், மாதர் சங்கம், பழங்குடி சங்கம் சார்பில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. பழங்குடி சங்க மாவட்டச் செயலாளர் க.ஜெகதீசன் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

திருப்போரில் இருந்து சிறுதாவூர் ஆமூர் மனாம்பதி வழியாக திருக்கழுக்குன்றம் செல்லும் இந்த தார் சாலையை சுற்று வட்டாரத்தில் உள்ள 20 க்கும் மேற்பட்ட கிராமங்களின் பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் சிறுதாவூர் ஊராட்சி மன்ற தலைவர் வேதா அருள், சிபிஐ சட்டமன்ற தொகுதி செயலாளர் எம்.பார்த்திபன், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் மோ. வெங்கடேசன், அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் ஜெ.அஜித் குமார், தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் ஒன்றிய செயலாளர் ஒய்.ஹாருன் பாஷா, ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தின் மாவட்ட துணைத்தலைவர் எஸ்.சந்தோஷ் உள்ளிட்ட தோழர்களும் கிராம பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.

# கோவை சட்டக் கல்லூரி நிர்வாகத்தின் அத்துமீறல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

கோவை சட்டக் கல்லூரியில் இளநிலைப் படிப்பு முடித்த மாணவி ஹரிதா, கல்லூரியில் சேரும் போது, நிர்வாகத்திற்கு வழங்கிய தனது "மாற்றுச் சான்றிதழ்" கேட்டு விண்ணப்பித்துள்ளார். மாற்றுச் சான்றிதழை வழங்கி, மாணவியின் உயர்கல்விக்கு உதவ வேண்டிய கல்லூரி நிர்வாகம் "மாற்றுச் சான்றிதழ்" அலுவலகத்தில் இல்லை என "கை" விரித்து, பொறுப்பற்ற செயலில் ஈடுபட்டுள்ளது. இது குறித்து கேள்வி எழுப்பிய மாணவர்கள் மீது பொய் வழக்கு போடுவது, தற்காலிக நீக்கம் செய்வது உட்பட அடக்குமுறை நடவடிக்கைகள் ஏவப்பட்டு வருகிறது. இதனால் சட்டக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் பதற்றம் நிலவி வருகிறது. கல்லூரி நிர்வாகத்தின் எதிர்மறை நடவடிக்கைகளால் போராடும் நிலைக்கு மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினையில் தமிழ்நாடு அரசு உடனடியாக தலையிட்டு மாணவர்கள் உரிமையை பாதுகாத்து, சுமூக சூழலை உருவாக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## அறிவிப்பு:

ஜனசக்தி சமூக ஊடகங்களில் முகநூல், டுவிட்டர், இன்ஸ்டாகிராம், டெலகிராம், யூடியூப் ஆகியவற்றில் அமைப்புச் செய்திகள், போராட்டங்கள், தலைவர்களின் உரைகள் இடம்பெற காணொலிகள், படங்களுடன் செய்திகளை சுருக்கமாக பின்வரும் மின்னஞ்சல் அல்லது வாட்ஸ்அப் எண்ணுக்கு அனுப்பி வையுங்கள்.

மின்னஞ்சல் :
janasakthidigital@gmail.com
வாட்ஸ் அப் : 8122521624

ஆசிரியர் குழு

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

# தமிழ்நாடு கோவில் மனையில் குடியிருப்போர் சங்கம் ஆர்ப்பாட்டம்

கோயில் மனைகளில் குடியிருப்போர்/ கடைகள் வைத்திருப்போர் மற்றும் விவசாய நில குத்தகை சாகுபடியார்களின்/நில உரிமைகோரி பிப்.21 அன்று சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள நாராயணப்பன் தெருவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு, மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு கோவில் மனையில் குடியிருப்போர் சங்க மாநிலத் தலைவர் வி.அ. பாலசுப்பிரமணியன், மாநிலப் பொருளாளர் எஸ்.ஏழுமலை ஆகியோர் தலைமை தாங்கினர்.

தமிழக இந்து சமய திருக்கோயில்களின் வீட்டுமனை வாடகைதாரர்கள் சங்க தலைவ கு.லோகநாதன், த.கோ.கு. சங்க வட சென்னை மாவட்ட தலைவர் காமராஜ், தென் சென்னை மாவட்ட தலைவர் பென்ஜமின், மத்திய சென்னை மாவட்ட தலைவர் தி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

கோரிக்கையை வலியுறுத்தி கோ யில்மனை குடியிருப்போர் சங்க செயலாளர் நா. பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தை ஆதரித்து தமிழக இந்து சமய திருக்கோயில்களின் வீட்டுமனை வாடகைதாரர்கள் சங்க பொதுச்செயலாளர் கே. மணி, மகளிர் அணி அமைப்பாளர் போரூர் ஆர். பூங்கொடி, அமைந்தகரை நில உரிமையாளர்கள் சங்க சட்ட ஆலோசகர் பி. பத்ரிநாத், தென்சென்னை மாவட்ட துணைத் தலைவர் எஸ். மனோகரன், திருவான்மியூர் வீட்டு உரிமையாளர்கள் சங்க செயலாளர் ஜெ. குணசேகர், அருள்மிகு அகத்தீஸ்வரர் கோயில் வீட்டுமனை குத்தகைதாரர்கள் சங்க துணைத் தலைவர் தீனதயாளன், நிர்வாகக்குழு உறுப்பினர் வில்லிவாக்கம், சசிக்குமார் ஆகியோர் பேசினர்.

மாவட்ட ஆட்சியரிடம் அளித்துள்ள மனுவில் கூறியுள்ளதாவது:

பல தலைமுறைகளாக, தங்கள் சொந்த செலவில் வீடு கடை கட்டி வாழ்ந்து வரும் இடங்களை, அறநிலயத்துறை நிர்வாகம், எவராலும் தானமாக வழங்கப்படாத, எந்தவித சொத்து பத்திர ஆதாரங்களும் இல்லாமல், எந்தவித அனுபவ பாத்தியதையும் இல்லாத இடங்களையும், மேலும் 1965 இனாம் ஒழிப்பு சட்டத்தின்படி, படிப்பறிவில்லாத காரணத்தினாலும், அறியாமையினாலும், அரசை அணுகி பட்டா பெற்றுக்கொள்ள தவறிய காரணத்தினால் தவறுதலாக கோயில் பெயர் அரசாங்க பதிவேடுகளில் இடம்பெற்றுள்ளதை காரணம் காட்டியும், மாதா மாதம் கோயிலுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட தொகையை வாடகையாக கணக்கிட்டு சொந்தம் கொண்டாடி இந்த இடங்களுக்கு தற்கால மார்க்கட் மதிப்பில் பலமடங்கு வாடகையை உயர்த்தி முன்தேதியிட்டு கணக்கிட்டு லட்சக்கணக்கில் பாக்கியிருப்பதாக அறிவிப்பு கொடுத்து வாழும் இடத்தை விட்டு வெளியேற்றும் அதிரடி நடவடிக்கையை தடுத்து நிறுத்திட வேண்டுமென்றும், குடியிருக்கும் இடங்களின் உண்மையான பயனீட்டாளர்களை கண்டறிந்து அவர்களுக்கே உரிமை பட்டா வழங்கிட வகை செய்யும் வகையில் டிரிபியூனல் (அ) உயர்மட்ட கமிட்டி அமைத்து தமிழக அரசு தீர்வு காண வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் மனுவில் கூறப்பட்டுள்ளன.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் (DASE)
சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் சங்கம் (IDPD)
அகில இந்திய முற்போக்குப் பேரவை (AIPF)
பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச்சங்கம்
இணைந்து நடத்தும்....

உலக சமாதானம், மக்கள் நலவாழ்வு மற்றும் மருத்துவர்கள் மருத்துவ பணியாளர்களின் உரிமைகள் குறித்த கருத்தரங்கம்

நாள் : 25.02.20236 சனிக்கிழமை மாலை 5.00 மணி
இடம் : முதல் தளம், ICSA மையம், 107 பாந்தியன் சாலை (எழும்பூர் மியூசியம் எதிரில்) எழும்பூர், சென்னை – 8
தலைமை : டாக்டர் **என்.வெங்கடேஷ்** சிறுநீரக மருத்துவ நிபுணர், மாநிலத் தலைவர் AIPF தமிழ்நாடு

கருத்துரை

உலக சமாதானமும் நலவாழ்வும்
டாக்டர். **அருண்மித்ரா** இணைத் தலைவர், அணுப்போர் தடுப்பிற்கான சர்வதேச டாக்டர்கள் சங்கம் IPPNW மற்றும் மூத்த துணைத் தலைவர், சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான டாக்டர்கள் சங்கம்

மக்கள் வாழ்வை பாதிக்கும் ஆயுதப்போட்டி
திரு. **அனில் ராஜிம் வாலே** AIPFஅகில இந்திய பொதுச்செயலாளர்

மக்கள் நல்வாழ்விற்கு எதிரான ஒன்றிய பட்ஜெட்
திருமதி. **கிருஷ்ணா ஜா** AIPF அகில இந்திய துணைத் தலைவர்

இளம் மருத்துவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தீர்வுகள்
டாக்டர்.**ஜி.ஆர்.இரவீந்திரநாத்** பொதுச்செயலாளர், தமிழ்நாடு DASE & AIPF



சி.பாஸ்கர்

# நைல் நதியின் தீரமும் காவிரியின் சோகமும்

**உலக வரலாற்றின் நெடும் பாதையில் நாகரிகங்கள் தோன்றி செழித்து வளர்ந்தது நதி தீரங்களில் தான். நதிகளின் படுகையில் தான் அது தன்னோடு திரட்டி வரும் வளமான வண்டலை குவித்து மண்ணையே பொன்னாக மாற்றும் அற்புதத்தை நிகழ்த்துகிறது. அந்த வரிசையில் வியக்க வைத்தவை எகிப்து தேசத்தின் நைல் நதி நாகரிகம். அப்படிப்பட்டது தான் நம் தேசத்தின் சிந்து, கங்கை, காவிரி நாகரிகங்களும் ஆகும்.**

அக்காலத்தில் பேரோக்கள் என்ற வம்சம் அந்நாட்டை ஆண்டு வந்தது. இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் பரவாத காலம்.

யூதர்களின் தன்னிகரில்லாத தலைவன். மோசஸ் அடிமையாக்கப்பட்டு கிடந்த தனது இன மக்களை, அந்த மன்னர்களின் கொடுங்கோன்மையிலிருந்து மீட்டு வந்தான். ஹாலிவுட் பிரம்மாண்ட தயாரிப்பான ‘பத்துக் கட்டளைகள்’ திரைப்படத்தில் அந்த காட்சி பார்ப்பவரை பரவசப்படுத்தும். அதேபோல் அந்நாட்டு சரித்திரப் பிரசித்திப் பெற்ற ‘கிளியோபாட்ரா’ மகாராணியின் வாழ்க்கை வரலாறும் திரைப்படமாக்கப்பட்டது. உலக அதிசயங்களில் செம்மாந்து நிற்கும் பிரம்மிப்பூட்டும் அம்மன்னர்களின் ஆட்சி கால படைப்புகளே!





கி.மு.விலேயே கிரேக்க மாவீரன் மகா அலெக்சாண்டரையும், ரோமானிய பேரரசன் ஜூலியஸ் சீசரையும் நைல்நதி எகிப்தில் உருவாக்கிய செல்வச் செழிப்பான வளமை தான் படையெடுக்கத் தூண்டும் காரணமாய் இருந்தது. அவர்களைத் தொடர்ந்து பிரான்சு சக்கரவர்த்தி மன உறுதி நாயகன் நெப்போலியன் போனபார்ட் அந்நாட்டின் மீது பெரும் படையெடுத்தான்.

ஆப்பிரிக்க கண்டத்தின் வடகிழக்கு புவிப்பகுதியில் அமைந்துள்ள இத்தகைய தன்னிகரில்லா நாகரிகம் போல் அக்கண்டத்தின் எந்த ஒரு தேசத்திலும் காண முடியாது.

‘எத்தியோப்பியா’ நாட்டில் சிறிய அளவில் தனது ஜீவ ஊற்றை இந்த மகாநதி தொடங்குகிறது. ஆதி மனிதன் தோன்றிய முதல் பூ பாகமான அத்தேசம் கிறிஸ்தவர்கள் நிறைந்தது. மலை முகட்டில் தோன்றும் இந்த நதியை புண்ணிய நதியாக அம்மக்கள் கொண்டாடுகிறார்கள். வெள்ளை நைல் – நீல நைல் என்ற தனது இரண்டு துணை நதிகளை தன்னோடு இணைத்துக் கொண்டு பிரம்மாண்டமான வெள்ளச்சாகரமாக மாறி வீறுநடைபோடுகிது.

**காங்கோ, டான்சானியா, உகாண்டா, சூடான், தெற்கு சூடான் என பதினோறு நாடுகளைக் கடந்து 6650 கி.மீ. பயணித்து மத்திய தரைக்கடலில் சங்கமிக்கிறது. அதன் துணை நதியான நீல நைல் தான் வளமான அதன் வண்டலை எகிப்து தேசத்தின் பள்ளத்தாக்கில் பரவவிட்டு பாய்கிறது.**

அந்த மண்ணில் விளையும் பருத்தி வெள்ளை நிற சொக்கத்தங்கம் என அழைக்கப்படுகிறது. உலக பருத்தி உற்பத்தியில் பெரும் பங்கு வகிப்பது எகிப்து மற்றும் அதன் அண்டை நாடான தெற்கு சூடான். அங்குதான் மக்கள் தலைவராக விளங்கிய நாசர் ஆட்சி காலத்தில் உலகிலேயே மிகப்பிரமாண்டமான ‘அஸ்வான்’ அணை கட்டப்பட்டது. அன்றைய சோவியத் யூனியன் அந்தப் பெரும் திட்டத்திற்கான அனைத்து பொருள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை செய்து, அந்தத் திட்டம் பெரிய நீர் மின் மற்றும் பாசன வசதியின் வரப்பிரசாதமாக எகிப்தை உயர்நிலைக்கு கொண்டு சென்றது. மிகப்பெரிய பாசனப் பகுதியாக மட்டுமல்ல, மீன்பிடித் தொழிலின் உச்சமாக இன்றும் பயனளித்து வருகிறது.

ஆனால் எகிப்து மற்ற நாடுகளை வஞ்சித்து வருகிறது. அதன் ஒரே வாதமும், வலிமையும் அது அந்நாட்டின் டெல்டாவில் அமைந்துள்ளது என்பதுதான். அந்நாட்டை அடுத்த எல்லையில் உள்ள தெற்கு சூடான் எவ்வளவோ மன்றாடியும், ஒரு சிறிய அளவு கூட அந்நாட்டுக்கு நதிநீரை பகிர்வு செய்ய எகிப்து தயாராக இல்லை. ஒவ்வொரு எகிப்திய நாட்டு குடிமகனும் இந்த விஷயத்தில் வெறித்தனமாக நடக்கும் அளவுக்கு அவனது உளவியல் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதே முறையில்தான் கர்நாடக அரசும், அதன்



கே.முருகன்

# கூட்டுறவு சங்கங்களை சிதைக்கும் ஒன்றிய ப

**நாட்டில் பலமாநிலங்களில் செயல்படும் கூட்டுறவு சங்கங்கள் பல மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 2002 படி உருவாக்கப்பட்டு செயல் பாட்டில் இருந்து வருகின்றன. ஒன்றிய பாஜக அரசு 2022 டிசம்பர் 7 ஆம் தேதி பல மாநில கூட்டுறவு சங்கங்கள் திருத்த மசோதா 2022 ஐ மக்களவையில் கொண்டு வந்தது. இந்த மசோதா 2002 சட்டத்தில் பல திருத்தங்களை செய்துள்ளது.**



2002 சட்டப்படி கூட்டுறவு வாரிய உறுப்பினர்கள் தேர்தல் பொருப்பில் இருக்கும் வாரிய உறுப்பினர்களால் நடத்தப்படும். தற்போது கொண்டு வந்துள்ள மசோதாவில், ஒன்றிய அரசால் ஏற்படுத்தப்படும் நிர்வாக அமைப்பே தேர்தலை நடத்துவது, மேற்பார்வையிடுவது ஆகிய பணிகளை மேற்கொள்ளும் என்கிறது.

ஒன்றிய அரசின் நிர்வாக அமைப்பில் தலைவர், துணைத்தலைவர் மற்றும் 3 பேர் கொண்ட உறுப்பினர்கள் இடம் பெறுவார்கள் இவர்கள் தேர்வு கமிட்டி மூலம் ஒன்றிய அரசால் நியமனம் செய்யப்படுவார்கள்.

வாரிய உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் சார்பில் செய்யப்படும் சேவையின் பொருட்களை உற்பத்தி செய்பவர்ளாகவும், தொடர்ந்து மூன்று பொது பேரவையின் கூட்டங்களில் கலந்து கொண்டவர்களாகவும் சங்கத்தின் செயல் பாட்டில் தொடர்ச்சியாகவும் இருப்பவர்கள் மட்டுமே வாரிய உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படுவார்கள்.

சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்களின் புகார் தொடர்பாக விசாரித்து நடவடிக்கை மேற் கொள்ள கூட்டுறவு சங்கத்தின் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார வரம்புக்குட்பட்ட ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கொண்ட குறை தீர்வு அமைப்பை ஒன்றிய அரசு நியமனம் செய்யும். குறை தீர்வு குழு சங்க உறுப்பினர்களின் பங்கு தொகை சங்க செயல்பாட்டில் சமவாய்ப்புகள், பலன்கள் தனி உறுப்பினரின் உரிமை தொடர்பான பாதிப்புகள் உள்ளிட்ட பிரச்னைகளை தீர்வுகான நடவடிக்கை எடுக்கும்.

விசாரணை காலம் புகார் பெற்ற நாளில் இருந்து மூன்று மாதத்திற்குள் முடிக்க வேண்டும். சமரச தீர்வு அமைப்பு வழங்கும் தீர்வு மீது ஆட்சேபனை இருக்குமானால் ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் ஒன்றிய பதிவாளரிடம் ஒருமாத காலத்திற்குள் சம்பந்தப்பட்டவர் முறையீடு செய்திட வேண்டும்.

கூட்டுறவு சங்கங்களின் சேர்ப்பு, பிரிப்பு தொடர்பானவை சங்க பேரவையில் கலந்து கொண்டுள்ள உறுப்பினர்கள் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர் வாக்களித்து மேற் கொள்ள வேண்டும் என்பதில் மாற்றம் செய்து மாநில கூட்டுறவு சங்க சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் பல மாநில கூட்டுறவு சங்கத்துடன் இணைத்துக்கொ ள்வதற்கு வழிவகை செய்துள்ளது. பேரவையில் கலந்து கொண்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் வாக்களித்து சம்மதம் பெற வேண்டும் என்கிறது.

நலிவடைந்த கூட்டுறவு சங்கங்களை புனரமைப்பு செய்வது, மறு கட்டமைப்பு செய்திட மேம்பாடு நிதி உருவாக்க திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

வாரியத்தின் இயக்குநர் குழுவில் ஒரு தாழ்த்தப்பட்டவர், மலைவாழ் மக்கள்

மக்களும் காவிரி நதிநீர் பகிர்வில் தமிழக நலனுக்கு எதிராக அநியாயமாக எதிர்மறை கண்ணோட்டத்தில் வழி நடத்தப்படுகின்றார்கள்.

நைல் நதி போல நம் நாட்டு காவிரி நதி அளவிலும், நீளத்திலும் பிரம்மாண்டமானதில்லை. ஆனால் காவிரிக் கரை நாகரிகம் எகிப்திய நாகரிகம் போல் வானளாவி ஓங்கி நிற்கிறது. தென்னிந்தியா முழுவதையும் சோழப்பேரரசு தன் ஆட்சியின் வலுவான கட்டமைப்பில் அடக்கி வைத்திருந்தது. வடக்கு எல்லையையும், அதன் அரசுகளையும் தன்னை நெருங்க விடாமல் சிம்ம சொப்பனமாக இருந்தது.

ஆசிய கண்டத்தின் மகா அலெக்சாண்டரைப் போல எஃகு வலிமைப் படைத்த ராஜேந்திர சோழனின் கப்பற்படை தென்கிழக்கு ஆசியாவின் அனைத்து தீவு நாடுகளையும் வென்று பேரரசின் எல்லைக்கோட்டை சமுத்திரத்திலும் வரைந்தது. அப்பேரரசின் வணிகம் ஆல்போல் தழைத்து நின்றது. பாதுகாப்பாக வணிகம் செய்யும் பிராந்தியமாக உலக வரைபடத்தின் உச்சத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்தது. உலக வர்த்தகர்களின் முக்கிய வணிக மையமாகவும், பாதுகாப்பு கேடயமாகவும் விளங்கியது.

கடற்கொள்ளையர்கள் மற்ற பிராந்தியங்களில் வணிகர்களை மிரட்டியது போல இப்பேரரசின் பறந்த எல்லையில் வாலாட்ட முடியாது. நிலவுடைமை பேரரசாக மாறி வலிமை பெற பொன்னி நதியின் வளம் பேருதவியாக விளங்கியது. காடுகளைத் திருத்தி பெரும் நிலப்பகுதி விளை நிலங்களாக மாற்றப்பட்டன. நீர் மேலாண்மை பயனுள்ள வழியில் நிர்வகிக்க நம் காலத்து பொதுப்பணி துறையை போல ‘ஏரி வாரியம்‘ அமைக்கப்பட்டது.

காவிரி நதியை நாம் கண்முன்னே படுகொலை செய்யும் மணல் மாபியாக்கள், நதியை வெட்டி கூறுபோடும் ஆக்கிரமிப்பாளர்கள் அன்று இல்லை. சிரம் அறுக்கப்படும் அபாயத்தை எவனாவது எதிர்கொள்வானா? “சோழநாடு சோறுடைத்து”, “வான் பொய்த்தாலும் தான் பொய்யா காவிரி” என காவேரி அன்னை கவின் மிகுந்து ஓடிய வரலாற்று காலமது. பெரும்படை நடத்தி சோழப்பேரரசு தொடர் வெற்றிகளைப் பெற்றதற்கு பொன்னி நதியின் தானிய களஞ்சியமும், அதன் இனிமையான தண்ணீரும் முக்கிய காரணியாகவும், போர் தந்திரத்தின் அங்கமாகவும் இருந்தது என வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்கிறார்கள். வேற்று மண்ணில் சோழப் பெரும்படை கடும் யுத்தங்கள் புரியும் போது, அதன் ஆயுத இருப்பும், உணவுப் பொருட்களும், குடிதண்ணீரும் தடையின்றி அவர்களுக்கு கிடைத்தது. எனவே மிகுந்த பாதுகாப்பு உணர்வோடு புலிப்படையாக உறுதியோடு களத்தில் நின்றார்கள்.

இந்த போர் வியூக ஏற்பாட்டில் மகா அலெக்சாண்டர் மாவீரன் நெப்போலியன், பாபர் என எல்லோரும் தடுமாறி பின்னடைவை யுத்த காலத்தில் சந்தித்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் வென்ற பகுதியில் அவை கிடைக்கும் என்று நம்பி படை நடத்தியவர்கள். எனவே, சோழப்பேரரசின் வேரே காவிரியில் தான் கால் பதித்து நின்றது என்பது சரித்திரச் சான்று. பேரரசின் எழுச்சியோடு சோழமண்டலம் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, நாகரிகம் என சர்வாம்சமாக ஏற்றம் பெற்றது; எழில் கொஞ்சியது.

**சோழ மரபில் வந்த குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் கர்நாடகப் பகுதியில் வாழ்ந்த மன்னன் காவிரியின் குறுக்கே தடுப்பணை கட்டினான். வெகுண்டெழுந்த குலோத்துங்கன் பெரும்படையோடு சென்று அந்த தடுப்பணையைத் தகர்த்து நிர்மூலம் ஆக்கினான். இன்னொரு முறை இந்தத் தவறை செய்தால் உன் நாடு தீக்கிரையாகி விடும் என்று எச்சரித்துவிட்டு நாடு திரும்பினான். ஆனால், நமது காலத்தில் நடப்பது என்ன?**

அரசியல் சாசனம் வரையறுத்து கூறும் நியாயப்படிகூட கர்நாடக அரசு காவிரி நதிநீர் பங்கீட்டில் நடந்து கொள்ள மறுத்து வருகிறது. தொன்மைக் காலம் தொட்டு தமிழகம் அனுபவித்து வரும் பாசன உரிமையை அது ஏற்கவில்லை. இந்த உரிமை விதி நமது நாட்டுக்கு மட்டுமல்ல உலகம் முழுவதும் உள்ள அனைத்து நதிநீர் பங்கீட்டிற்கும் அடிப்படையான சர்வதேச சட்ட விதி, உலக நீதிமன்றம் கூட இதை செயல்படுத்தும் தார்மீகக் கடப்பாடு கொண்டது என்பது உலக நாடுகள் அறியும்.

சுதந்திர இந்தியாவின் ஆட்சி காலத்தில் காவிரியின் முக்கிய துணை நதிகளான கபினி, ஹேரங்கி, ஹேமாவதி என அனைத்து நதிகளின் குறுக்கே, தமிழ்நாட்டின் ஆட்சேபனையை மீறி அணைகள் சட்ட விரோதமாக கட்டப்பட்டு விட்டன. இன்றும் புதிய புதிய அணைகள் கட்ட தொடர்ந்து கர்நாடகா திட்டமிட்டு வருகிறது.

**தொடர்ந்து மத்தியில் ஆட்சியில் இருந்த, இருக்கின்ற தேசியக் கட்சிகள் தமிழகத்தை வஞ்சித்து வருகின்றன. மிகக் குறுகிய காலமே பிரதமராக இருந்தாலும் வி.பி.சிங் தான் இந்த விஷயத்தில் நேர்மையாக நடந்து நடுவர் மன்றம் அமைக்க உத்தரவிட்டார். இதுவும் இல்லை என்றால் என்ன நடந்திருக்கும் என்று எண்ணவே அச்சமாக இருக்கிறது.**

இந்தியாவின் இமயமலையில் தோன்றி பஞ்சாப் மாநிலம் வழியாக பாகிஸ்தானில் பாய்ந்து வளப்படுத்தும் சிந்து நதி தீரம் கூட பாதுகாப்பாக உள்ளது. உதயமான காலம் தொட்டு இந்தியாவிற்கு சொல்லண்ணா துயரம் தரும் பாகிஸ்தான் கூட நதிநீர் பங்கேட்டில் இந்தியாவால் வஞ்சிக்கப்படவில்லை.

இந்தியாவின் நாகரீகம் மற்றும் கலாச்சார கேந்திரங்களின் மணிமகுடமாக புகழ் ஒளி வீசும் நிலம் தமிழகம் என்று பண்டித நேரு உலக அரங்கில் பேசியுள்ளார். தனது புகழ்மிக்க எழுத்துப் படைப்புகளில் பதிவு செய்துள்ளார். காவிரிக் கரையில்தான் தமிழகத்தின் நாகரிக வேர்கள் ஊன்றி நிற்கின்றன. காவரி பொய்த்தால் தமிழ் நிலத்தின் உன்னதமான உயர் நெறிகளும், ஆன்மாவும் அகன்று விடும். அரசியலின் குறுகிய லாபங்களுக்காக, தேர்தல் வெற்றிக்காக இந்தியா என்ற பெரிய தேசத்தின் முக்கிய அங்கத்தை வெட்டி அப்புறப்படுத்தும் வரலாற்றுப் பிழையை ஒன்றிய அரசும், கர்நாடக அரசும் செய்யக்கூடாது. கர்நாடகத்தின் அனைத்து கட்சிகளும் இது சகோதர துரோகம், இது தங்களுக்கே காலப்போக்கில் பாதகமாகும் என்பதை பொறுப்போடு சிந்திக்க வேண்டும்.

கடலின் குளிர்ந்த நீருக்கும் – சூரியனின் கடும் வெப்பத்திற்கும் இடையே ஒன்றுபடுதல், முரண்படுதல் என்ற இயற்கையின் இயங்கியலே அதை மழை மேகமாக பண்புநிலை மாற்றம் செய்து மலை முகட்டிற்கு அனுப்புகிறது. இயற்கை அன்னையின் மற்றுமொரு படைப்பான மலைக்காடுகள் சிற்றோடையாக, நதியாக வடிவமைத்து மீண்டும் கடலுக்கு அதன் தாய் வீட்டிற்கு அனுப்பி வைக்கிறது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் இருக்கும் காரணத்தால் அரபிக் கடல் மற்றும் வங்காள விரிகுடாவின் தண்ணீர் முழுக்க முழுக்க கர்நாடகத்திற்கே சொந்தமா?

தீபகற்பவடிவில் இருக்கும் இந்தியாவின் நிலப்பரப்பிற்கு ‘பருவக்காற்று’ என்னும் அருங்கொடையை மாநில எல்லையை வரையறுக்கையில் அளித்தது இயற்கை. அதனை மறுத்து அரசியல் செய்வது இந்தியாவின் ஐக்கியத்திற்கு ஊறு செய்யும் செயல். தமிழகத்தைப் பொறுத்தவரை எத்தனையோ வஞ்சிப்பிற்கு பிறகும் மிகவும் பொறுப்போடு நடந்து வருகிறது. ஒரு தேசத்தின் இயற்கை வளத்தை மிக நியாயமான முறையில் பங்கீடு செய்து கொள்ள வேண்டும். அந்த வளம் – உற்பத்தி முறை – அதன் பங்கீடுதான் பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய இந்தியா போன்ற நாட்டின் தேசிய ஐக்கியத்தை காக்கும் காப்பு அரணாகும்.

**இதனை கருத்தில் கொண்டுதான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நதிகளை தேசிய மயமாக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. சொந்த நாட்டின் மாநிலங்களே ஒன்றையொன்று வஞ்சித்து இயற்கை வளத்தை சுரண்டினால், உலகத்தின் எந்த மூலையிலோ நடக்கும் அநீதிகளுக்கு எதிராக குரல் எழுப்ப நமக்கு என்ன தார்மீக உரிமை இருக்கிறது?**

எகிப்து தேசம் டெல்டாவில் இருந்து கொண்டு நைல் நதி தோன்றி பாய்ந்து வரும் நாடுகளை வஞ்சிக்கிறது. ஆனால், காவிரி தோன்றும் கர்நாடகா மாநிலம் டெல்டாவில் அமைந்திருக்கும் தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது!

எகிப்தில் நாகரிகத்திற்கு இணையான அத்தனை பன்முகத்தன்மையும், பிரம்மாண்டமும் காவிரி நாகரிகத்திற்கு உண்டு. இதனை இந்தியாவின் ஒட்டுமொத்த பெருமைக்கும் உன்னதமான அடையாளமாக, வரலாற்றின் புகழ்மிக்க பகுதியாக போற்ற வேண்டியது ஒவ்வொரு இந்திய குடிமகனின் பொறுப்பாகும்.

மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும், கொடுமைப்படுத்தும் அடிமை முறையை எதிர்த்து மனித குல விடிவெள்ளி ஆபிரகாம் லிங்கன் மிகவும் துணிச்சலான நடவடிக்கையை எடுத்தார். தேச ஒற்றுமையை நிலை நாட்டினார். அதுபோல மிகவும் மோசமான வரலாற்றுக் கட்டத்தை கடந்து கொண்டிருக்கும் நம் தேசத்திற்கு, நீதி மானான அவரைப் போன்ற ஒரு தலைவர் தேவைப்படுகிறார்.

தொடர்புக்கு: 96007 23726

---

# ள கட்டுப்படுத்தி
# ா.ஜ.க. அரசு!



பிரிவு சார்பில் ஒருவரும் இரண்டு பேர் பெண்களாகவும் கொண்டதாக அமைக்க வேண்டும் என்று கூறுகிறது.

இயக்குநர் குழுவில் இரண்டு பேர் இணைத்து கொள்பவர்கள் கூட்டுறவு சங்கங்களின் வங்கி வரவு, நிர்வாகம் உள்ளிட்ட செயல் பாடுகளில் சிறப்பு அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும் இயக்குநர் குழு 21 பேர் கொண்டதாக தொடரலாம்.

கூட்டுறவு சங்கங்களின் வாரியங்கள் வழிகாட்டுதல், மாற்றியமைத்தல் வேலையையும் ஒன்றிய அரசு 51 % பங்குகள் வைத்திருக்கும் சங்கங்களில் ஒன்றிய அரசு செயல்படுத்தும் என்பது திருத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத்தில் ஒன்றிய அரசு குறைந்த பட்ச பங்கு வைத்திருந்தாலும் கடன்கள் வழங்கியிருந்தாலும் நிதி உதவிக்கான உத்தரவாதம் அளித்திருந்தாலும் அந்த சம்பந்தப்பட்ட. கூட்டுறவு சங்கங்களின் வாரியங்களில் வழிகாட்டுதல், மாற்றி அமைத்தல் பணியை ஒன்றிய அரசு மேற்கொள்ளலாம் என கூறியுள்ளது.

பல மாநிலங்கள் கூட்டுறவு சங்கங்கள் உறுப்பினர் அல்லது அதிகாரிகள் தவறான கணக்கு தருவது, தவறான தகவல்கள் அளிப்பது மற்றும் குற்றம் தொடர்பான விசாரணைக்கு மதிப்பளிகாத நிலை ஆகியவற்றிற்கு ரூ.2 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை அபராதம் விதிக்கலாம் என்பதில் அபராதமாக ரூ.5ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரையில் விதிக்கலாம் என திருத்தப்பட்டுள்ளது.

இந்த மசோதாவை கவனமாக பார்க்க வேண்டும். கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளை ஒன்றிய அரசு தனது வசம் எடுத்துக் கொண்டுள்ளளதோடு, மாநில உரிமைகளில் அப்பட்டமாக தலையிடுவதாகும்.

மாநிலங்களின் கூட்டுறவு சங்கங்கள் செயல்பாடுகளை பலவீனப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

2022 டிசம்பர் 15ஆம் தேதியில் நியூஸ் கிளிக் ஆங்கில இதழ் மசோதா மூலம் அதிகாரத்தை மையத்தில் குவித்துக் கொள்ளும் மோடி அரசு செயல்பாடு குறித்து தலையங்கம் எழுதியுள்ளது.

மோடி அரசின் அதிகாரத்தை மையப் படுத்தும் நடவடிக்கை என்று இடது சாரி அமைப்புகள் கருத்து கூறியுள்ளதாக செய்தியும் வெளியிட்டுள்ளது.

கூட்டுறவுத் துறை அமித்ஷா வசம் கூடுதலாக வழங்கப்பட்டப் பிறகு இந்த மசோதா கொண்டு வந்துள்ளதை பார்க்கும் போது மோடி அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றும் நடவடிக்கையே இதுவும் என்பதை புரிந்து கொண்டு செயல் பட வேண்டும்

கூட்டுறவே நாட்டுயர்வு என்பதற்கு அதன் ஜனநாயக பூர்வ செயல்பாடுகள் அவசியமானது. மாநிலத்தில்! உள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கு வேட்டு வைப்பதோடு கூட்டுறவு அமைப்பின் கீழ்மட்ட ஜனநாயத்தை நசுக்கும் இந்த மசோதாவை எதிர்த்து அனி திரண்டு போராட்டம் நடத்துவது அவசியமானது.

தொடர்புக்கு: 76039 30397

# ஈரோட்டில் இரா.முத்தரசன் தேர்தல் பிரச்சாரம்



ஈரோடு கிழக்குத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ஈவிகேஎஸ் இளங்கோவனை ஆதரித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கடந்த பிப். 13, 14 ஆகிய இரு தினங்கள் சூரம்பட்டி நால்ரோடு. கள்ளுக்கடை மேடு, கோட்டை பகுதி, அசோகபுரம், லட்சுமிதியேட்டர் பகுதி, சம்பத் நகர் , ஞானபுரம் என ஈரோடு கிழக்குத் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் திறந்த வேனில் நின்றபடி தீவிர பிரச்சாரம் செய்தார். அதுசமயம், தமிழக அமைச்சர்களும் அவருடன் இணைந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

அதன்படி 13ம் தேதி சூரம்பட்டி நால் ரோடு பகுதியில் அமைச்சர் கேகேஎஸ் எஸ் ஆர் ராமச்சந்திரனும் , அதே போல், கள்ளுக்கடை மேடு பகுதி பிரச்சாரத்தில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் மற்றும் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோரும் இரா.முத்தரசனுடன் இணைந்து வாக்கு சேகரிப்பு பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

மறுநாள் 14ம் தேதி அசோகபுரத்தில் நடைபெற்ற பிரச்சாரத்தில் இரா.முத்தரசனுடன் அமைச்சர் வி.செந்தில் பாலாஜியும், லட்சுமி தியேட்டர் பகுதியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு , கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் எ.வ.வேலு ஆகியோரும் இணைந்து பிரச்சாரம் செய்தனர்.

இப்பிரச்சாரப் பயணத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி , முன்னாள் தேசிய குழு உறுப்பினர் த.ஸ்டாலின் குணசேகரன், கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் டி.ஏ.மாதேஸ்வரன், ஈரோடு முன்னாள் மாவட்ட செயலாளர் கே.ஆர்.திருநாவுக்கரசு, ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி பிரபாகரன், வடக்கு மாவட்டச் செயலாளர் சு.மோகன் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மலைவாழ் பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தனி கவனம்

## த.ஸ்டாலின் குணசேகரன் வலியுறுத்தல்




ஈரோடு: 'மலைவாழ் பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரசும், சமூகமும் தனிக்கவனம் செலுத்த வேண்டும்' என்று மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் கேட்டுக் கொண்டார்.

ஈரோடு மாவட்டம் அந்தியூர் அருகிலுள்ள மலைப் பகுதி ஊரான பர்கூரில் இயங்கி வரும் பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியில் அப்பள்ளியின் நூலகத்திற்கு நூல்கள் வழங்கும் விழா சமீபத்தில் நடைபெற்றது. விழாவில், மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது :

மலைவாழ் மக்களின் குழந்தைகள் கல்வியை எக்காரணம் கொண்டும் பாதியில் நிறுத்தக் கூடாது. முன் எப்போதையும் விட இப்போது கல்விக்கான வாய்ப்பு மிகவும் அதிகமாகியுள்ளது. வறுமை, கல்லாமை, விழிப்புணர்வின்மை, அறியாமை, சமூகச்சூழல் போன்ற பல அம்சங்கள் கல்வியைத் தொடர்வதற்கு சவால்களாக உள்ளன. இத்தனை தடைகளையும் மீறி வைராக்கியத்தோடும் உறுதியோடும் கல்வி கற்கிற மனநிலையை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதே போல், மலைவாழ் பகுதிகளில் உள்ள பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரசும், சமூகமும் தனிக்கவனம் செலுத்த வேண்டும் .

பாடப் புத்தகங்கள் வாழ்க்கையின் அச்சாணி போன்றவை. அதே சமயத்தில், பாடப் புத்தகங்கள் அல்லாத பொதுநூல்கள் மாணவர்களின் ஆளுமையை வளர்க்கும் ஆற்றல் மிக்கவை. இவ்விரண்டு வகை நூல்களும் மாணவர்களின் இரண்டு கண்களைப் போன்றவை. பள்ளி வய திலிருந்தே புத்தக வாசிப்பிற்கு வசப்படுகிற மாணவர்கள் மிகுந்த தன்னம்பிக்கை உள்ளவராக வளர்வார்கள்.

செய்தித்தாள்கள் வாசிப்பு மொழி அறிவை வளர்ப்பதோடு உலக நடப்புகளை உள்வாங்கிக் கொள்வதற்கும் பயன்படுகிறது. பள்ளிக் காலத்திலிருந்தே வாசிப்புப் பழக்கத்தை தொடர்ந்து மேற்கொள்பவர்கள் பல துறைகளில் தலைமைத் தகுதியுடன் விளங்குகின்றனர். பொதுப் புத்தகங்கள் வாசிப்பவர்களுக்கு மற்றமாணவர்களைக் காட்டிலும் பாடங்களை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க கையெழுத்து இயக்கம்

தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மாதர் தேசிய சம்மேளனம் ஆகிய அமைப்புகளின் நிர்வாகிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி நாச்சிகுறிச்சி பஞ்சாயத்தில் குண்டும் குழியுமாக உள்ள சாலைகளை சரி செய்யக் கோரியும், வடிகால் வசதி ஏற்படுத்தி தரக் கோரியும், காவேரி குடிநீர் அனைத்து பகுதிகளிலும் கிடைக்க கோரியும் தீர்வு காண்பதற்கு பொதுமக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தி மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு கொடுப்பது என முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கட்டட சங்க ஒன்றிய துணைத் தலைவர் என்.பாஸ்கரன் தலைமையில் சிபிஐ மணிகண்ட ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர் டி. நிர்மலா இயக்கத்தை துவக்கி வைத்தார். கட்டட சங்க மாவட்ட தலைவர் எம்.ஆர்.முருகன், மாவட்ட துணை தலைவர் எஸ். முத்தழகு, சிபிஐ ஒன்றிய பொருளாளர் கே.என்.ஜெகநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நாடார் தெரு பகுதியில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

## ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல்:

# வீடு வீடாக வாக்குச் சேகரிப்பு பிரச்சாரம்



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ஈவிகேஎஸ்.இளங்கோவனை ஆதரித்து பிப்.19 அன்று ஈரோட்டில் சூரம்பட்டி நால்ரோடு, பெரியார் நகர், சிதம்பரம் காலனி, குமாரசாமி வீதி, பட்டேல் வீதி, கருப்பணன் வீதி, ராஜா காடு பகுதி உள்ளிட்ட இடங்களில்,இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் தலைமையில் வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரிப்பு பிரச்சாரம் நடைபெற்றது.

இதில் திருப்பூர் மாநகராட்சி துணை மேயர் எம்.கே.எம்.பாலு, மாநகராட்சி கவுன்சிலர்கள் அருணாச்சலம், ரவிச்சந்திரன், ராஜேந்திரன், செல்வராஜ், திருப்பூர் புறநகர் மாவட்ட செயலாளர் கேஎம். இசாக்,இந்தியகம்யூனிஸ்ட்கட்சியின்ஈரோடு தெற்கு மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.சின்னசாமி, எம்.குணசேகரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் ஈரோடு மாவட்டச் செயலாளர் கே.ஆர். திருநாவுக்கரசு, விவசாய சங்க மாநிலத் துணைத் தலைவர் சிஎம்.துளசிமணி, கட்சியின் வடக்கு மாவட்டத் துணை செயலாளர் ஜி.வெங்கடாசலம், வடக்கு மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.கந்தசாமி, கேகே.சந்திரசேகரன், தெற்கு மாவட்ட பொருளாளர் என்.ரமணி, மாவட்ட குழு உறுப்பினர்கள் எஸ் பொன்னுசாமி, எம்.செங்கோட்டையன், டி. கண்ணன், பவானி நகர செயலாளர் ப.மா. பாலமுருகன், பவானி ஒன்றிய செயலாளர் வி.ஜி.அருள், ஈரோடு வட்டார செயலாளர் ஜி.கல்யாணசுந்தரம், வட்டாரத் துணைச் செயலாளர் எம்.கல்யாணசுந்தரம் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் தெரிவித்தார்.

# தேசிய கல்விக் கொள்கையை திரும்பப் பெறு!

## மாணவர் பெருமன்ற மாநில மாநாட்டில் தீர்மானம்

மாணவர் பெருமன்ற மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: தேசிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும், தெளிவான மொழிக் கொள்கையை உருவாக்க வேண்டும், நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க வேண்டும், கியூட் தேர்வினை திரும்பப் பெற வேண்டும், உயர்கல்வி சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு விகிதாசார முன்னுரிமை வழங்க வேண்டும்,

கல்வியின் மூலம் ஜனநாயகம் வளரும் வகையில் கல்வியை மேம்படுத்த வேண்டும், பொதுப்பள்ளி முறையினை பலப்படுத்த வேண்டும், பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும், பேராசிரியர் பணி நியமனங்களில் முறைகேடுகளை தடுத்து நிறுத்த வேண்டும்,

பல்கலைக்கழகங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும், தனியார் கல்லூரிகளில் உள்ளதுபோல் அரசுக் கல்லூரியிலும் அனைத்து விதமான பாடப்பி ரிவுகளை துவங்க வேண்டும்,

ஐஐடி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும், அரசு கலைக் கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும், அனைத்து மாணவர்களுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும், அரசு கல்லூரிகளில் மலிவு விலை உணவுத் திட்டம் கொண்டு வர வேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மேலும், திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத்தில் மாணவர் சேர்க்கை இடங்களையும், பாடப் பிரிவுகளையும், ஒதுக்கப்படுத்தும் நிதியையும் அதிகப்படுத்த வேண்டும்; பேராசிரியர் காலிப் பணி யிடங்களை முழுமையாக நிரப்புவதோடு, அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்,

டெல்டா மாவட்டங்களை மையமாகக் கொண்டு திருவாரூர் மாவட்டத்தில் அரசு வேளாண்மை கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி தொடங்கப்பட வேண்டும், அரசுப்பள்ளி, கல்லூரிகளில் உள்ள ஆசிரியர் காலிப்பணியிடங்களை முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும், தமிழ்நாட்டில் இயங்கும் கேந்திரிய வித்யாலயா, நவோதயா பள்ளிகளில் பத்தாம் வகுப்பு வரை தமிழ்மொழி வழிக் கல்வி கட்டாயமாக கற்பித்திட வேண்டும்,

அரசு மாணவர் விடுதிகளில் உணவுப்படி யினை விலைவாசி உயர்வுக்கு ஏற்றாற்போல் உயர்த்தி, தரமான உணவினை வழங்கிட வேண்டும்; மாணவர் சேர்க்கைக்கான இடங்களையும் அதிகப்படுத்த வேண்டும்.


மாணவர்களின் கல்விக்கடனை ரத்து செய்திட வேண்டும்; அந்நியப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கும் வரைவு விதிகளை பல்கலைக்கழக மானியக் குழு திரும்பப் பெற வேண்டும், இளம் தலைமுறையினரை சீரழித்துக் கொண்டிருக்கும் போதைப்பொருள் விற்பனையை முழுமையாக தடை செய்ய உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்,

# தோழர் ஜி.இருதய செல்வராஜ் காலமானார்



தென்காசி மாவட்டம் முதுபெரும் தோழரும்., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருவேங்கட ஒன்றிய செயலாளரும், மாவட்ட ஏஐடியூசி தலைவரும், தன் வாழ்நாள் முழுவதும் கட்சிக்காக தன்னை அர்ப்பணித்த தோழர் ஜி. இருதய செல்வராஜ் முதுமையின் காரணமாக காலமானார் !

தோழருக்கு தென்காசி மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த இரங்கலை தெரி வித்துக் கொள்கிறது !



# சங்கே முழங்கு!

அறியாமையின் உச்சத்தில் ஆளுநர்

## மார்க்ஸ் பற்றி பேசுவதை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை




ஆயிரமாண்டுகளில் தோன்றிய அறிஞர்களில் தலைசிறந்த பேரறிவாளர் காரல் மார்க்ஸ் என அறிவுலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனை அறியாத தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, “காரல் மார்க்சின் சிந்தனை இந்தியாவை சிதைத்தது” என பேசியிருப்பது அவரது அறியாமையின் உச்சத்தைக் காட்டுகிறது.

தமிழ்மொழி மற்றும் சமூகம் குறித்தும், இந்திய ஒன்றியத்தில் இணைந்துள்ள மாநிலங்களில் நிலவி வரும் தனித்துவம் வாய்ந்த சமூக உறவுகள் குறித்தும் அடிப்படை புரிதல் இல்லாதவர் தமிழ்நாட்டின் ஆளுநராக வந்திருப்பது வரலாற்றுத் துயரமாகும்.

சமூகப் பொருளாதார வாழ்வில் முற்றி வரும் நெருக்கடியில் இருந்து வெளியேற வழி தேடி, உலகம் முழுவதும் காரல் மார்க்சை மறுவாசிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்பதை ஆளுநர் கருத்தில் கொள்ள வேண்டும்.


சாதி அடுக்குமுறை சமூக அமைப்பில், மனிதர்களைப் பிளவுபடுத்துவதற்காகவே, மதவெறியை மூட்டிவிடும் மூடத்தனத்தின் “முகவர்கள்”, சமூக பொருளாதார விடுதலைக்கு வழிகாட்டிய அறிவு ஆசான் காரல் மார்க்ஸ் மீது அவதூறு பொழிவது புதிதல்ல.

அவர் “உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள், இழப்பதற்கு ஏதுமில்லை, அடிமை விலங்குகளைத் தவிர” என்ற உண்மையை உலகுக்கு அறிவித்த அடி நாள் தொட்டு, அதன் மீது பொழியப்பட்ட அவதூறுகளையும், அடிப்படையில்லாத குற்றச்சாட்டுக்களையும், அடக்குமுறைகளையும் முறியடித்து முன்னேறி வருவதை வரலாறு உறுதி செய்துள்ளது. வர்க்க பேதமில்லாத, சாதி, மத வேற்றுமைகள் இல்லாத, நிகரற்ற மனிதநேய சமூகம் அமைக்க முடியும் என்ற அறிவியல் உண்மையை உலகத்திற்கு அறிவித்த மேதை காரல் மார்க்ஸ் குறித்து விஷமத்தனமாக பேசுவதை ஆளுநர் ரவி இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு எச்சரிக்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.


சென்னைப் பல்கலைக்கழகம்
தமிழ் இலக்கியத்துறை வழங்கும்

**ம.சிங்காரவேலர் அறக்கட்டளைச் சொற்பொழிவு**



நாள் : 02.03.2023
நேரம் : மாலை 3.00 மணி

இடம்: தமிழ் இலக்கியத்துறை – கருத்தரங்க அறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

வரவேற்பு: முனைவர் **ஆ.ஏகாம்பரம்**

சிறப்புச் சொற்பொழிவு:

திரு **த.ஸ்டாலின் குணசேகரன்**
தலைவர், மக்கள் சிந்தனைப் பேரவை, ஈரோடு

தலைப்பு:
ம.சிங்காரவேலரின் அறிவியல் சிந்தனைகள்

அனைவரும் வருக !


# முன்னாள் அமைச்சர் என்.எஸ்.எம். உபயத்துல்லா மறைவு




## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

முன்னாள் அமைச்சர் என்.எஸ்.எம்.உபயத்துல்லா (வயது 81) 19.02.2023 அன்று தஞ்சை மருத்துவ மனையில் காலமானார் என்ற துயரச்செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையுற்றோம்

திராவிட முன்னேற்றக் கழகத்தில் தஞ்சை மாவட்ட முன்னோடிகளில் ஒருவர். தஞ்சை நகரச் செயலாளர் பொறுப்பில் கால் நூற்றாண்டுக்கும் மேலாக சிறப்பாக பணியாற்றியவர்.

கட்சி எல்லை கடந்து அனைத்து கருத்துக் கொண்டோர்களிடமும் சகோதர பாசத்துடன் பழகும் பண்பாளர். இலக்கிய நூல்களை விற்பதிலும், வாசிப்பு வட்டத்தை விரிவுபடுத்தியதிலும் கவனம் செலுத்தியவர்.

இந்திய சோவியத் நட்புறவுக் கழகம் போன்ற பொது அமைப்புகளில் கம்யூனிஸ்டுகளுடன் இணைந்து செயல்பட்டு வந்தவர். நான்கு முறை சட்டமன்ற உறுப்பினர், ஒரு முறை அமைச்சர் என உயர் பொறுப்புகளிலும் செயல்பட்டு, தஞ்சைக்கு பெருமை தேடித் தந்தவர்.

மன்னை ப.நாராயணசாமி, கோ.சி.மணி, எஸ்.எஸ். பழனிமாணிக்கம், டி.ஆர்.பாலு போன்றோர்களின் நெஞ்சுக்கு நெருக்கமான உடன் பிறப்பாக திகழ்ந்தவர். அவரது மறைவு திமுகழகத்திற்கு ஈடு செய்ய இயலாத பேரிழப்பு. தஞ்சை நகரம் வளர்ச்சிக்கு உதவி செய்த பெருந்தகையை இழந்து விட்டது.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த அஞ்சலி செலுத்துவதுடன் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், கழகத் தோழர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### இலக்கிய அமைப்புகள் சார்பில் இரங்கல் பேரணி

தனது இறுதி நாள் வரை கொள்கை பிடிப்புடன் வாழ்ந்து மறைந்த கலை இலக்கிய முன்னோடி, முன்னாள் தமிழ்நாடு அமைச்சர் என்.எஸ்.எம் உபயத்துல்லா அவர்களுக்கு தஞ்சையில் அனைத்து கலை இலக்கிய அமைப்புகளின் சார்பில் இரங்கல் பேரணி நடைபெற்றது.

இரங்கல் பேரணிக்கு வெற்றி தமிழர் பேரவை மாநில துணை பொதுச்செயலாளர் இரா. செழியன் தலைமை வகித்தார். மாவட்ட பொறுப்பாளர் ஆசிப் அலி, முனைவர் இளமுருகு ஆகியோர் முன்னிலை வகித்தனர். வெற்றி தமிழர் பேரவையின் நிர்வாகிகள் கவிஞர் இனியன், புலவர் சிவனேசன், ராகவ மகேஷ், மணிபாலா, தமிழ்நாடு தமிழ் சங்க மாநில செயலாளர் ரவி ராஜ், தமிழ்நாடு ஆசிரியர் சங்கம் பூவை சாரதி,. தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் ஐயாறு. புகழேந்தி, கவிஞர் வல்லம் தாஜ்பால் மற்றும் பல்வேறு அமைப்புகளின் சார்பில் இரங்கல் பேரணியில் கலந்து கொண்டனர்.

# சென்னை கிழக்கு கடற்கரை சாலைக்கு “சிங்காரவேலர் சாலை” என பெயர் வைத்திட வேண்டும்

## சிங்காரவேலர் பிறந்த தின விழாவில் “இஸ்கப்” அமைப்பு தீர்மானம்!

தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட்டும் ,இந்தியாவில் மே தினத்தை முதன்முதலாக கொண் டாடியவரும், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிதாமகனுமான சிங்காரவேலரின் எழுத்தாக்கங்கள் நூல்கள் முழுமையும் மறு பதிப்பு செய்திட வேண்டும். கிழக்கு கடற்கரை சாலைக்கு “சிந்தனை சிற்பி சிங்கார வேலர் சாலை” என பெயரிடப்பட வேண்டும் .

சென்னையின் பிரதான இடத்தில் சிங்காரவேலருக்கு சிலையும் மணி மண்டபம் அமைத்து தமிழக அரசு சிறப்பு சேர்க்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள், இந்திய கலாச்சார நட்புறவு கழகத்தின் சார்பில் நடை பெற்ற சிங்காரவேலர் பிறந்ததின விழாவில் நிறைவேற்றப்பட்டன.

சிந்தனை சிற்பி சிங்காரவேலரின் 164 வது பிறந்தத தின விழா சார்பில் பிப்.18 அன்று காலை சென்னை மாவட்ட ஆட்சியர் வளாகத் தில் உள்ள சிங்காரவேலர் முழு உருவ சிலைக்கு மலரஞ்சலி செலுத்தப் பட்டது .மாலை தியாகராய நகர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு அலுவலகமான பாலன் இல்லத்தில் சிங்காரவேலரின் பிறந்த தின விழா நிகழ்வுகள் நடை பெற்றன.

“இஸ்கப்” அமைப்பின் சென்னை பெருநகர செயலாளர் செந்தில்குமார் வரவேற்புரை நிகழ்த்தினார் .மாவட்ட பொருளாளர் ஆர். எஸ் .மாதவன் முன்னிலையில் தலைமை குழு உறுப்பி னர் வழக்கறிஞர் கே. தேசிங் தலை மையேற்று நிகழ்வை ஒருங்கிணைத் திட்டார்.

பி.எஸ்.என்.எல் ஓய்வு பெற்றோர் தொழிற்சங்கத்தின் வி.கே.கோபாலன் ஏஐடியுசியின் ஆனந்தராவ் பாஸ்கர் பத்திரிகை ஊடக பணியாளர் சங்கத் தின் தலைவர் இசைக்கும் மணி, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறி ஞர்கள் சங்கத்தின் செயலாளர் ஆர். கிருஷ்ணகுமார் , அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் செயலர் அ.பாரதி உள்ளிட்டோர் சிங்கார வேலரின் சிறப்புரைத்து பேசினர்.

தலித் மக்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து

# நாடு தழுவிய ஆர்ப்பாட்ட இயக்க தயாரிப்பு கூட்டம்

அகில இந்திய தலித் உரிமைகள் இயக்கத்தின் தேசியக்குழு முடிவின்படி ஒன்றிய அரசாங்கத்தால் நாடு முழுவதும் தலித் மக்கள் மீதான அடக்குமுறைகளைக் கண்டித்து மாநிலத் தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்ற முடிவின் அடிப்படையில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலக்குழு சார்பில் மார்ச் 14 அன்று சென்னை வள்ளுவர் கோட்டம் முன்பு மாநிலத் தலைவர் இரா.நல்லகண்ணு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதற்கான ஆலோசனைக் கூட்டம் 20.02.2023 அன்று சென்னை பாலன் இல்லத்தில் வடசென்னை மாவட்டச் செயலாளர் ஜி.சுப்பிரமணி தலைமையில் நடைபெற்றது. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியாசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., கலந்து கொண்டு தலித் மக்கள், மலை வாழ் மற்றும் சிறுபான்மை மக்கள் படும் துயர் குறித்தும் அவர்கள் மீதான அடக்குமுறைகள் குறித்தும் பேசினார்.

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன் தமிழ்நாடு முழுவதிலிமிருந்து தோழர்கள் பங்கேற்பது, வடக்கு மண்டல மாவட்டங்களிலிருந்து அதிக எண்ணிக்கையில் பங்கேற்பது குறித்தும் பேசினார்.

கூட்டத்தில் சிபிஐ மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி, த.ஒ.வா.இ. மாநிலச் செயலாளர்கள் எஸ்.கே.சிவா, கீ.சு.குமார், மாநில தலைமைக்குழு உறுப்பினர்கள் லி.உதயக்குமார், சு.பாஸ்கர், வடசென்னை மாவட்டத் தலைவர் இரா.மோ.சந்தோஷ்குமார், தென் சென்னை மாவட்டத் தலைவர் அசோகன், மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் மாதவன், செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் பி.எஸ்.எல்லப்பன் உட்பட மூன்று மாவட்டத்தின் மாவட்ட துணை நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# கர்நாடக வனத்துறை துப்பாக்கி சூட்டில் தமிழக மீனவர் பலி

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

பாலாறும், காவிரியும் கலக்கும் இடத்தில் மீனவர்கள் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். வழக்கம்போல மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது கர்நாடக வனத்துறையினர் துப்பாக்கி சூடு நடத்தியதில் கோவிந்தப் பாடியை சேர்ந்த மீனவர் ராஜா கொல்லப்பட்டிருக்கிறார். துப்பாக்கி சூட்டில் மரணமடைந்த ராஜாவின் சடலம் பாலாறு பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

கர்நாடக வனத்துறை தமிழ்நாட்டில் இருந்து வேலைக்கு செல்லும் கூலித் தொழிலாளர்கள் மீது இரக்கமற்று, துப்பாக்கி சூடு தொடர்ந்து நடத்தி வருகிறது. கர்நாடக வனத்துறையின் செயலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. மரணமடைந்த மீனவர் ராஜா குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. இந்த சம்பவம் தொடர்பாக தக்க விசாரணை மேற்கொள்ளவும், மீனவர் ராஜா குடும்பத்துக்கு மறுவாழ்வுக்கு இழப்பீடு வழங்கவும் தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# செறிவூட்டப்பட்ட அரிசியை எறும்பு கூட தின்னாத வீடியோ வைரல்

## பொதுமக்கள் அச்சம்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகா முழுவதுமாக முன் அறிவிப்பு இன்றி மறைமுகமாக 141 ரேசன் கடைகளில் ஜனவரி மாதம் முதல் செரிவூட்டப்பட்ட அரிசி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது, இந்த அரிசி இயற்கைக்கு மாறாக இருப்பதால் எறும்பு கூட தின்னாத நிலையில் ரசாயனம் கலந்து இருப்பதால் பொதுமக்கள் அச்சத்தில் உள்ளதாகவும், தண்ணீரில் அரிசியை கொட்டிய ஐந்து நிமிடத்தில் அரிசி உப்பி சோறு போல மாறுகிறது. இதனால் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய வகையில் இருப்பதால் இந்த செரிவூட்டப்பட்ட அரிசியை தடை செய்து ரேஷன் கடைகளில் வழங்குவதை முற்றிலும் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தி சீர்காழியில் விவசாயிகள் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் சீர்காழி வட்டாட்சியர் செந்தில்குமாரிடம் அரிசியை திரும்ப ஒப்படைத்தனர் மேலும் டெல்டா மாவட்டத்தை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து இது போன்ற ரசாயனம் கலந்த அரிசியை வழங்குவதை அரசு முற்றிலும் நிறுத்தி டெல்டாவில் விளைய கூடிய நெல்லை அரிசியாக வழங்க முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மயான வசதி அமைத்துதர கோரிக்கை

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், கனஞ் சாம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட, க. சத்திரப்பட்டி கிராமத்தில் 40 ஆண்டுகள் ஆகியும் அடிப்படை மயான வசதி அமைக்க பலமுறை மனுசெய்தும் எந்த பயனும் இல்லை. கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளை உடனடியாக செய்து தருமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெம்பக்கோட்டை ஒன்றிய செயலாளர் எம்.நடராஜன், க.சத்திரப்பட்டி கிளைச் செயலாளர் பி.மகாலிங்கம், துணைச் செயலாளர் வி. வைரமுத்து ஆகியோர் தலைமையில் பிப். 16 அன்று வெம்ப கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலரை நேரில் சந்தித்து மனு கொடுத்தனர்.

கோரிக்கை மனுவைப் பெற்றுக் கொண்ட வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி மன்ற தலைவரிடம் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு வலியுறுத்தினார். இதனால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிநடத்த இருந்த போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

# காரைக்குடி ஸ்டேட் பேங்க் முன்பு ஏஐடியூசி ஆர்ப்பாட்டம்



காரைக்குடியில் ஒன்றிய மோடி அரசையும் ஸ்டேட் பேங்க் வங்கி அதிகாரிகளை கண்டித்தும் மோசடி அதானின் ஒரு லட்சம் கோடி கடன் தள்ளுபடி, ரூ.68 ஆயிரம் கோடி கடன் பங்கு மார்க்கெட்டில் இழப்பு போன்றவற்றை கண்டித்தும், காரைக்குடி ஸ்டேட் பேங்க் வங்கி முன்பு ஏஐடியுசி சார்பில் மாவட்ட செயலாளர் ஏ.ஜி.ராஜா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

உள்ளாட்சி மாநில துணை தலைவர் பி எல் ராமச்சந்திரன் மாவட்ட துணை செயலாளர் ஆர்.கண்ணன் கட்டிட தொழிலாளர் சங்க மாநில குழு உறுப்பினர் சண்முகசுந்தரம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நல்லம்பள்ளியில் வி.தொ.ச. பிரச்சார இயக்கம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ் 2023 –2024 ஆம் ஆண்டிற்கு ஒன்றிய அரசு ரூ.60 ஆயிரம் கோடி ஒதுக்கியுள்ளது. இந்தத் தொகையின் மூலம் வேலை அட்டை பெற்ற குடும்பங்களுக்கு 15 நாள் கூட வேலை வழங்க முடியாது. அதனால், தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கம், ஒன்றிய அரசு ரூ.2.74 லட்சம் கோடி ஒதுக்க கோரி 18.02.2023, முதல் 05.03.2023 வரை பொதுமக்களை சந்தித்து பிரசாரத்தில் ஈடுபடுகிறது. அதன் முதல் நிகழ்ச்சியாக நல்லம்பள்ளி ஒன்றியம் இலளிகத்தில் துவங்கியது.

## ஜனவரி 26 டிராக்டர் பேரணி அனுமதி மறுப்பு

# தேனி, தூத்துக்குடி மாவட்ட காவல் துறைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம்




தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

13 மாதங்களாக போராடிய விவசாயிகளின் கோரிக்கைகளைஏற்று உறுதியளித்த ஒன்றிய பாஜக அரசு ஒன்னரை ஆண்டுகள் கழிந்தும் விவசாயிகளுக்கு எதிராக மீண்டும் சட்டங்களை செயல்படுத்தி வரும் துரோகத்தை அம்பலப்படுத்தும் நிலையில் இந்தியா முழுவதும் நடந்த இயக்கத்தின் அங்கமாக தமிழ்நாட்டில் ஜனவரி 26, 2023 அன்று டிராக்டர் பேரணி நடத்திட அறிவிக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் அனுமதி மறுக்கப்பட்டதுடன் மீறி நடத்தினால் டிராக்டர்கள் பறிமுதல் செய்யப்படும்... உரிமையாளர்கள் மீதும்பேரணியில் வந்தவர்கள் மீதும் வழக்குப் போடப்படும் என மிரட்டல் தீவிரமானது.

எது வரினும் எதிர்த்து நடத்துவது என மாநில எஸ்.கே.எம் அறிவித்த பின் பலமாவட்டங்களில் சட்ட ஒழுங்கை பாதுகாத்திடும்நிலையில் வரையறுக்கப்பட்ட முறையில் காவல்துறை நடந்து கொண்டது. வெற்றிகரமாக பெரும்பகுதி மாவட்டங்களில் டிராக்டர்கள் பேரணி நடந்தது. டிராக்டர் இல்லாமல் பேரணி நடத்திடக்கூடாது என எஸ்.கே.எம்; முடிவெடுத்ததால் தூத்துக்குடியில் நடத்திடவில்லை.

தேனி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் மிரட்டலே அவரது பதிலாக தொடர்ந்துவந்ததால் வேறு வழி இல்லாமல் மீறிஅங்கு டிராக்டர் பேரணி நடத்தப்பட்டது. இதனால் அங்கு விவசாயிகள் மீது... டிராக்டர் உரிமையாளர்கள் மீது வழக்கு போட்டுள்ளது.

எனவே தேனி மற்றும் தூத்துக்குடி மாவட்ட காவல் துறையை கண்டித்தும் போட்டுள்ள வழக்குகளை திரும்ப பெறக்கோரியும் 15.02.2023 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் அங்கு இரு மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான விவசாயிகள் பங்கு கொண்டுஎழுச்சி முழக்கமிட்டனர். தேனி ஆர்ப்பாட்டத்தில் ஒலிபெருக்கி உரிமையாளர்களையும் மிரட்டி தடுத்துவிட்டனர். இதையும் மீறி ஒலிபெருக்கிஅங்குவைக்கப்பட்டது.

தூத்துக்குடியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலதலைவர் எஸ் குணசேகரன் முன்னாள் எம்எல்ஏ... மாநில ஒருங்கிணைப்பாளர் கே பாலகிருஷ்ணன் சிபிஐ(எம்) விவசாய சங்கம் சார்பில் கே.பெருமாள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் த.வி.ச. வி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

தேனியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி ..தமிழ்நாடு விவசாய சங்க மாநில தலைவர் பி.சண்முகம் .. மக்கள் அதிகாரம் பொறுப்பாளர் காளியப்பன் மாநில செயற்குழு உறுப்பினர் மேரி லில்லி பாய், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டி. கண்ணன் மாவட்ட த.வி.ச செயலாளர் காசி. விஸ்வநாதன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கடந்த அதிமுக ஆட்சியில் டிராக்டர் பேரணி நடத்தப்பட்ட போது: காவல்துறை எப்படி எதிராக நடந்து கொண்டதோ.. தற்போதைய ஆட்சியிலும் காவல்துறை இப்படி நடந்துள்ளது. எஸ்கேஎம் கோரிக்கைகளுக்கு ஆதரவாக கடந்த காலங்களில் பங்கு பெற்று செயல்பட்ட திமுக தற்போது பாஜகவை அம்பலப்படுத்தாது இருந்திட.. எஸ் கே எம் போராட்டத்தில் ஒன்றிய அரசுக்கு ஆதரவாக உள்ளது போல் ஒரு சூழலை தமிழக காவல்துறை உருவாக்கி உள்ளது. இந்த நிலை எதனால் வந்தது?

தமிழக அரசு விவசாயிகளிடம் உள்ள ஆதரவு அணுகு முறையில் இருந்து.. இதற்கு ஒரு சரியான கறாரான வழிகாட்டலை கொடுக்காததால்... காவல்துறை தன் விருப்பத்திற்கு இதை கையாண்டு விவசாயிகளுக்கு எதிரான அரசாக காட்டியுள்ளனர். காவல்துறை கருப்பு ஆடுகள் சில காவல்துறையின் நுரையீரல் கெட்டுப்போனதாக காட்ட முயற்சித்திருக்கிறார்கள்.

எனவே தமிழக அரசு எதிர்காலத்தில் சரியான வழிகாட்டலை காவல்துறைக்கு கொடுப்பதுடன் காவல்துறையால் தற்போது போடப்பட்டுள்ள வழக்குகளை திரும்ப பெற்றிடவேண்டும் என்பதை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு பி.எஸ்.மாசிலாமணி கூறியுள்ளார்.

# தோழர் பார்வதி கிருஷ்ணன் 9 ம் ஆண்டு நினைவுநாள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர்களில் ஒருவராகவும் கோயமுத்தூர் மக்களவைத் தொகுதி உறுப்பினராகவும் இருந்து செயல்பட்ட தொழிற்சங்க தலைவர் பார்வதி கிருஷ்ணன் 9 ம் ஆண்டு நினைவு தினம் 20.02.2023 ல் அனுசரிக்கப்பட்டது.

கோவை வரதாராஜபுரத்தில் உள்ள சக்கரை செட்டியார் இல்லத்தில் பார்வதி கிருஷ்ணன் உருவ சிலை உள்ளது. அங்கு நடைபெற்ற புகழஞ்சலி நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு ஏஐடியூசி மாவட்ட கவுன்சில் பொது செயலாளர் சி. தங்கவேல் தலைமை தாங்கினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளரும், ஏஐடியூ.சி. மாநில செயலாளர்களில் ஒருவருமான எம்.ஆறுமுகம் பார்வதி கிருஸ்ணன் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார்.

அவர் பேசும்போது, "தோழர். பார்வதி கிருஷ்ணன் அவர்கள் மறைந்து 8 ஆண்டுகள் முடிந்து ஒன்பதாவது ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது.

அவர் மிகவும் வசதியான ஜமீன் குடும்பத்தில் பிறந்தவர், ஆனாலும் தன்னை தொழிலாளி வர்க்கத்திற்கு பாடுபடுவதற்காக அர்ப்பணித்துக் கொண்டார். ஒரு தொழிலாளியை போன்ற எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார். 1961ல் ஏ.ஐ.டி.யூ.சி. யின் 26வது மாநாடு கோயமுத்தூரில் நடைபெற்றது. அன்றைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக இருந்த சின்னையன் மற்றும் பார்வதி கிருஷ்ணன் ஆகியோர் அந்த மாநாட்டை பொறுப்பேற்று மிகச் சிறப்பாக நடத்தி கொடுத்தார்கள். அது எட்டு நாள் மாநாடு. அன்றைக்கு நமது மில் தொழிலாளர் சங்கத்தில் 18,000 பேர் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

கடந்த வாரம் கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக தோழர்கள் டி.ராஜா, ஆர்.முத்தரசன், நா. பெரியசாமி ஆகியோர் வந்திருந்தார்கள். கொடிசியாவில் நடைபெற்ற அந்த



நிகழ்ச்சியில் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டு கலந்துரையாடினார்கள். அப்போது அவர்கள் பார்வதி கிருஷ்ணன் அவர்கள் எம் பி ஆக இருந்தபோது கோவைக்கு மூலப்பொருள் கிடைப்பதற்கு மிகப்பெரும் முயற்சி எடுத்து கொண்டு வந்தார்கள் என்ற சம்பவத்தை பதிவு செய்தார்கள்.

திருப்பூரில் ஜவுளி தொழில் நவீன இயந்திரங்கள் சீனாவில் இருந்து கொண்டு வருவதற்கும் தோழர் பார்வதி கிருஷ்ணன் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பெரு முயற்சி ஆகும். இன்றைக்கு திருப்பூர் வளர்ச்சியில் பார்வதி கிருஷ்ணன் அவருடைய பங்கும் உண்டு என்றும் கூறினார். இந்த நிகழ்ச்சியில் பேசிய வழக்கறிஞர் கே. சுப்பிரமணியம் தோழர். பார்வதி கிருஷ்ணன் அவர்கள் மிகவும் துணிச்சல் மிக்க பெண்மணி என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பி.மௌனசாமி, மு.வ. கல்யாணசுந்தரம், மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், அமைப்புசாரா தொழிலாளர் சங்க தலைவர் பி.சுப்பிரமணி, கலை இலக்கிய பெரும் மன்றம் ப.பா. ரமணி, கே.சி மூர்த்தி, கே.ஆர்.தங்கராஜ், சக்திவேல் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

# பாலன் இல்லத்தில் சிங்காரவேலர் 164 வது பிறந்த தினம்!



சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களின் 164 வது பிறந்த தினம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமை அலுவலகமான சென்னை பாலன் இல்லத்தில் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் தலைமையில் நடைபெற்றது.

மலர்களால் அலங்கரிக்கப்பட்ட சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மூத்த தலைவர் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் மலர் தூவி செவ்வணக்கம் செய்து நிகழ்வை தொடக்கி வைத்தார்.

கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் கே. சுப்பராயன் அவர்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தி சிங்காரவேலர் அவர்களுடைய தத்துவார்த்த சிந்தனைகளையும் இந்திய நாட்டு சுதந்திரப் போராட்ட காலத்தில் காங்கிரஸ் இயக்கத்திலும் கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் அவர் ஆற்றிய பணிகளையும் நினைவூட்டி பேசினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் வகிதா நிஜாம் சிங்கார வேலரின் தியாகங்களை எடுத்துச் சொன்னார். தமிழ்நாடு ஏஐடியூசி மாநிலத் தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன், கட்சியின் தென்சென்னை மாவட்ட செயலாளர் எஸ். கே. சிவா, மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா. கருணாநிதி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி, தொலைத் தொடர்பு ஊழியர் ஓய்வு பெற்றோர் சங்கத் தலைவர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி, மற்றும் பல தோழர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

### இரா.நல்லகண்ணு உரை

இறுதியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு சிறப்புரையாற்றினார் . அவருடைய உரையில் “தோழர் சிங்காரவேலர் தான் 1921 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு பரிபூரண சுதந்திரம் வேண்டும் என்று காங்கிரஸ் மாநாட்டிலே முதல் குரல் எழுப்பியவர். அப்போது சிங்காரவேலர் தான் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிரதிநிதியாக இருந்து இந்தியாவின் பரிபூரண விடுதலைக்காக குரல் எழுப்புகிறேன் என்று சொன்னார். தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டிலெல்லாம் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிரதிநிதியாக நின்று சுதந்திரத்தை வலியுறுத்தினார்.

1927 ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் நானே பரிபூரண சுதந்திர தீர்மானத்தை முன்மொழிகிறேன். தாங்கள் வழிமொழியுங்கள் என்று சிங்காரவேலரிடம் கூறினார். நேரு முன்மொழிந்த தீர்மானம் மாநாட்டில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் நிறுத்தி வைக்கப்பட்டது.

பின்னர் 1929 ஆம் வருடம் டிசம்பர் இறுதியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் மோதிலால் நேரு அவர்கள் பரிபூரண சுதந்திரம் தீர்மானத்தை முன் மொழிந்தார். காங்கிரஸ் மாநாடு ஏற்றுக் கொண்டது. அதன் பின்னர் தான் இந்தியாவின் சுதந்திரதினமாக 1930 ஜனவரி 26 முடிவு செய்யப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வந்தது.

உண்மையான விடுதலை 1947 இல் கிடைத்தாலும் விடுதலை தினத்தை நினைவு கூரும் விதத்தில் 1950 ஜனவரி 26 முதல் குடியரசு தினமாக கொண்டாடப்படுகிறது. இந்தியாவின் விடுதலைக்கு முதல் குரல் எழுப்பிய சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிரதிநிதி என்று அழைத்துக் கொண்ட சிங்காரவேலரின் அளப்பரிய தியாகம் இந்திய விடுதலைக்கு வித்தாக இருந்ததை நினைவுபடுத்தினார்.

மேலும் சிங்காரவேலர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் அங்கம் வகித்த காலத்தில் தான் மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்களுக்கு சத்துணவு திட்டம் கொண்டுவரப்பட்டதையும் மூத்த தலைவர் நல்லகண்ணு அவர்கள் நினைவு கூர்ந்தார் .

**வட சென்னை:** தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் மற்றும் மே தின கொடியை சென்னையில் முதல் முறையாக ஏற்றிய சிந்தனை சிற்பி தோழர் சிங்காரவேலர் அவர்களின் 163வது பிறந்தநாளை முன்னிட்டு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டம் சார்பாக சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அவருடைய முழு திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, முன்னாள் வடசென்னை மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ஜீ.சுப்ரமணி,எம்.ஜெய்சங்கர், மத்திய சென்னை மாவட்ட துணை செயலாளர் ஆர்.ரஞ்சித், மத்திய சென்னை மாவட்ட பொருளாளர் எம்.வரதன், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில துணைச் செயலாளர் இரா.இராசாமி உள்ளிட்ட பல தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

### சட்டப்படி சம்பளம் வழங்க வலியுறுத்தி

# கோயம்புத்தூர் மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் பிச்சை எடுக்கும் போராட்டம்

சட்டப்படி சம்பளம் வழங்க வலியுறுத்தி கோயம்புத்தூர் மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் கோவை மத்திய தந்தி அலுவலகம் அருகில் பிச்சை எடுக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோயமுத்தூர் மாநகராட்சியில் சுமார் 6000ம் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதில் தற்காலிக தூய்மைப் பணியில் 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிகிறார்கள். இந்த தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் ரூ 721 வழங்க வேண்டும். இது 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் துறையின் முத்தரப்பு கமிட்டியின் பரிந்துரைப்படி அறிவிக்கப்பட்ட அரசாணை எண் 62 ன் படி மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் அளித்த குறைந்தபட்ச ஊதிய தொகையாகும்.

அரசால் பரிந்துரைக்கப்பட்ட இந்த தொகையை சம்பளமாக வழங்க வேண்டும் என்று தூய்மை பணியாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

பல்வேறு கட்ட போராட்டத்தின் விளைவால் மாமன்ற கூட்டத்தில் தொழிலாளர்களுக்கு 648 ரூபாய் தினக்கூலி வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

அந்தத் தொகையும் முழுமையாக வழங்கப்படவில்லை. ரூ 648ல் பிஎஃப் இஎஸ்ஐ பிடித்தம் போக 420 ரூபாய் மட்டும் வழங்கப்படுவதாக கூறப்படுகிறது.

எனவே தூய்மை பணியாளர்கள் தங்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் ரூபாய் 721 வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி பிச்சை எடுக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்திற்கு கோவை மாவட்ட




ஜீவா முனிசிபல் சுகாதார பணியாளர் சங்கத்தின் செயலாளர் என்.செல்வராஜ் தலைமை தாங்கினார். கோயமுத்தூர் லேபர் யூனியன் பொதுச் செயலாளர் ஆர்.பாலகிருஷ்ணன், துப்புரவு மற்றும் பொது பணியாளர் சங்கம் தலைவர் தமிழ்நாடு செல்வம், தமிழ்நாடு தூய்மை காவலர் பொது தொழிலாளர் சங்கம் பி.ஜோதி, நம்மவர் தூய்மை பணியாளர் தொழில் சங்கம் பி.எஸ். மணிகொடி, கோவை மாநகராட்சி அண்ணா சுகாதார பணியாளர் சங்கம் அரிபுரம் கே.ரவி, கோவை மாவட்ட டாக்டர் அம்பேத்கர் மக்கள் துப்புரவு மற்றும் பொதுப் பணியாளர் சங்கம் மற்றும் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தொழிலாளர்களுக்கு இந்த மாதம் அரசு சட்டப்படி வழங்க வேண்டிய ஊதியம் வழங்கப்படவில்லை என்றால், தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் இந்த போராட்டத்திற்கு தலைமை ஏற்ற என்.செல்வராஜ் தெரிவித்தார்.

# கோவை அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் வெற்றி! போராடிய மாணவர்களுக்கு வாழ்த்துகள்!

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் தினேஷ் சீரங்கராஜ், மாநிலச் செயலாளர் பா.தினேஷ் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கோவை அரசு சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பை முடித்த மாணவி ஹரிதா தனது சான்றிதழ்களை தருமாறு கேட்டுள்ளார். மாணவியின் சான்றிதழ்களை தொலைத்த கல்லூரி நிர்வாகம், தனது தவறை மறைத்து, மாணவியை தொடர்ந்து அலைக்கழித்து வந்தது. சான்றிதழ்களை தருமாறு மாணவியின் கணவரும், சட்டக் கல்லூரி மாணவருமான ஷேக் முகமது நிர்வாகத்திடம் முறையிட்டார். முறையான பதில் அளிக்காமல் கல்லூரி நிர்வாகத்தினர் மாணவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். சான்றிதழை வழங்காமல் மாணவர் ஷேக் முகமதை கல்லூரி நிர்வாகம் இடைநீக்கம் செய்தது.

இதற்கெதிராகவும், சான்றிதழ்களை வழங்கக் கோரியும் ஷேக் முகமது உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார். இதை பொறுத்துக்கொள்ள முடியாத கல்லூரி நிர்வாகம், தங்களை பணி செய்யவிடாமல் தடுத்ததாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் ஷேக் முகமது, ஹரிதா மீது காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்தனர்; காவல்துறை இம்மாணவர்கள் மீது வழக்கு பதிவு செய்தது.

இதனை தொடர்ந்து, தன்னை பாரபட்சமாக நடத்திய ஆசிரியரை கேள்வி கேட்டதற்காக, ஆசிரியரை தாக்கிவிட்டார் எனக் குற்றம் சாட்டி, தரணீஸ் என்ற மாணவரும் இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இதற்கெதிராகவும், மாணவர்கள் மீதான பொய் வழக்கையும், இடைநீக்க உத்தரவையும் திரும்ப செய்யக் கோரியும், கல்லூரியில் நடைபெறும் பிரச்சினைகள் குறித்தான விசாரணைக் குழுவில் மாணவ பிரதிநிதிகளும் இடம் பெற வேண்டும் எனக் கோரியும் கோவை அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் 21.02.2023ஆம் தேதி மதியம் முதல் 22.02.2023ஆம் தேதி மதியம் வரை தொடர் உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் சுமார் 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

பல்வேறு மிரட்டல்களுக்கு மத்தியிலும், உறுதிமிக்க மாணவர் போராட்டத்தால் கல்லூரி நிர்வாகமும், காவல்துறையும் பின்வாங்கியது; மாணவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக உறுதியும் அளித்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு மாணவர்கள் ஒற்றுமையோடும், துணிச்சலோடும் போராடி வெற்றி பெற்றுள்ளனர்.

போராட்டக் களத்தில் மாணவர்களுக்கு நம்பிக்கையளித்து ஒருங்கிணைத்ததில், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில துணைத் தலைவர் பா.நி.சினேகா, கோவை மாவட்டச் செயலாளர் மு.பிரசாந்த் உள்ளிட்டோரின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். சக மாணவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக உறுதிமிக்க போர்குணத்தை வெளிப்படுத்திய சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

# திண்டுக்கல் மாவட்ட ஏஐடியூசி மாநாடு

திண்டுக்கல் மாவட்டம் ஏ.ஐ.டி.யூ.சி யின் 14ஆவது மாவட்ட மாநாடு பிப். 21 அன்று வி.ஜி.எஸ். மஹாலில் நடைபெற்றது. முதல் நிகழ்வாக எஸ்.ஜெயமணி, எஸ்.பிச்சைமணி ஆகியோர் பட திறப்பு விழா மற்றும் அஞ்சலி கூட்டம் நடைபெற்றது.

ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட கௌரவத் தலைவர் துரை சந்திரமோகன் மாநாட்டிற்கு தலைமை தாங்கினார். ஏ. ஐ.டி.யூ.சி யின் மாநில தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன் கொடி ஏற்றி வைத்தார். சிபிஐ தேசியக்குழு உறுப்பினர் க.சந்தானம் மாநாட்டை துவங்கி வைத்து உரையாற்றினார். மாநில பொதுச் செயலாளர் எம். ராதாகிருஷ்ணன், சிபிஐ மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாநாட்டில் கௌரவத் தலைவராக துரை சந்திரமோகன், மாவட்ட தலைவராக ஜி.பாலன், மாவட்ட பொதுச் செயலாளராக கே.ராஜாங்கம், மாவட்ட பொருளாளராக பி.அருணாச்சலம், மாவட்டத் து.தலைவர்களாக ஏ.பி.மணிகண்டன், எல்.மோகன், ஏ.ராஜகோபால், சி.சுப்பையா, மாவட்ட து.செயலாளர்களாக ஆர்.நாச்சிமுத்து, எம்.ஐயப்பா, எஸ்.கண்ணன் எம்.மணிகண்டன் உட்பட 31 மாவட்ட குழு உறுப்பினர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

### குத்தகை சாகுபடியாளர் குடியிருப்போர்

# நில உரிமை கோரும் கோரிக்கை ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டம், கடையம் ஒன்றியத்தில் வழிபாட்டுத்தலங்கள் அறக்கட்டளைகள் மடங்கள் மற்றும் சத்திரங்களுக்கு சொந்தமான நிலங்களின் குத்தகை சாகுபடியாளர் குடியிருப்போர் நில உரிமை கோரும் கோரிக்கை ஆர்ப்பாட்டம் ஆம்பூர் விவசாய சங்கத்தலைவர் எம் சட்டநாதன் தலைமையில் நடைபெற்றது. எஸ்.ஜீவா சீ.ஹரிஹரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட து. செயலாளர் எஸ்.வேலாயுதம், மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர்கள் ஏ. பரமசிவன், ஆர்.ஈஸ்வரன், எம்.எஸ்.கிட்டப்பா ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

## நூல் நயம்

### நான் தடுப்பூசி குத்தப்போனேன்




நான் தடுப்பூசி குத்தப்போனேன் என்னும் இந்நூல். இலங்கை தமிழரான சச்சிதானந்தன் சுகிர்த ராஜா பல்வேறு இலக்கிய இதழ்களில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாகும்.

ஜார்ஜ் பிளைட் என்னும் கருப்பு நிறத்தவர். வெள்ளை காவலர்களால் கழுத்தை இறுக்கி கொல்லப்பட்டதை. எட்டு நிமிடங்கள், 46 வினாடிகள், 16 ஆற்றொனோ அலறல்கள் என இந்த நிறவெறி படுகொலையை அம்பலப்படுத்தி உள்ளார்.

என்னால் மூச்சுவிட முடியவில்லை என்று அவர் மன்றாடிய இரங்கல் வார்த்தைகள். ‘எனக்கு ஒரு கனா உண்டு’ என்ற மார்டின் லூதர்கிங்கின் வசனங்களுடன் கருப்பினத்தவர்களின் வரலாற்றில் ‘என்னால் மூச்சு விட முடியவில்லை’ என்ற வேதனையான இந்த மூன்று சொற்களும் இனி எங்கும் ஒலிக்கும்.

கருப்பினத்தவர் வெள்ளை காவலரால் கொல்லப்படுவது இது முதல் தடவை அல்ல. பெரிய பட்டியலே இருக்கிறது. முன்பு நடந்த கொலைகளை விட பிளாட்டின் மரணம் அமெரிக்காவையும் மொத்த உலகத்தையும் உலுக்கிய காரணம். பழைய கருப்பின கொலைகளில் வெள்ளைக்காரர்கள் கைவசம் இருந்த சாக்குபோக்குகள் உதவின.

கைதியின் கையில் துப்பாக்கி இருந்தது. என்னுடைய உயிரை காப்பாற்ற ஒரு வினாடியில் முடிவு எடுக்க வேண்டி இருந்தது. குற்றவாளி தப்பி ஓட பார்த்தான் ஆகையினால் சுட்டேன் என்று நியாயப்படுத்தப்பட்டது. ஆனால் இந்த கொலையை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத வகையில் வெள்ளை நிற வெறி அம்பலப்பட்டு போனதை விவரித்து உள்ளார்.

கொடூரமான அநீதி நடப்பதை தொலைக்காட்சி பார்வையாளர்களால் தெளிவாக காண முடிந்தது. அது மட்டுமல்ல, அருகில் இருந்தோரின் அவரை விட்டு விடுங்கள் அவரால் மூச்சு விட முடியவில்லை என்ற இறங்கிய குரலையும் கேட்க முடிந்தது. இவற்றைவிட கருப்பர்கள் பற்றிய பொது தளத்தில் கட்டமைக்கப்பட்ட ஒரு பொய் தகர்ந்தது. கருப்பினத்தவரின் வலி பாசாங்கானது. சும்மா நடிக்கிறார்கள் என்பது வெள்ளை காவலர்கள் பரப்பிய பொய்யான தகவல். இந்த தடவை மக்கள் நம்புவதாக இல்லை . பிளைட் தன்னுடைய உயிருக்கு போராடியதை உலகமே பார்த்தது. அவர் தனது அம்மாவை அழைத்தது எல்லாரையுமே உலுக்கியது.

பொல்லாத வெள்ளை நிறவெறிக்கு பலியான ஜார்ஜ் பிளைட்டின் சோகம் நம்மையும் கவ்வுகிறது.

– இன்சுவை பாரதி

| | |
|---|---|
| நூலாசிரியர் | : சச்சிதானந்த சுகிர்த ராஜா |
| பக்கம் | : 126 விலை : 130 |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 |

### வ உ. சி .யின் திரிசூலம்




இந்திய நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர். வ..உ..சியை பற்றி தமிழகத்தின் தலைசிறந்த நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர். மார்க்சிய அறிஞர் ஆ.சிவசுப்பிரமணியன் எழுதிய வ. உ .சி.யின் திரிசூலம் என்னும் இந்நூல்.

விடுதலைப் போராட்ட இயக்கத்தில். பல்வேறு தலைவர்களும், பல்வேறு வடிவங்களில் ஈடுபட்டார்கள். வ. உ. சி .ஒரு தனித்துவமான வடிவத்தில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். அது வேறு யாரும் சிந்திக்காதது. அது அவர் தொடங்கிய ‘ ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி’ என்கிற கப்பல் நிறுவனம் ஆகும். நான்காம் தமிழ் சங்கத்தை மதுரையில் நிறுவிய பாண்டிதுரை தேவரின் ஒத்துழைப்போடு இந்த நிறுவனத்தை அவர் தொடங்கினார்.

எஸ். எஸ் . காலியோ, எஸ். எஸ். லாவோ என்ற பெயரிலான இரண்டு கப்பல்களும் தூத்துக்குடிக்கு 1907 மே மாதம் வந்து சேர்ந்தன. இது வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர்களின் அடிமடியில் கை வைக்கும் செயலாக அமைந்தது.

இவ்விரு சுதேசி கப்பல்களின் வருகையால் மகிழ்ச்சி அடைந்த பாரதியார். தாம் நடத்தி வந்த இந்தியா இதழ் ஏட்டின் முகப்பில் கருத்துப்படம் வெளியிட்டதுடன், வ.உ. சிதம்பரனாரையும், அவருக்கு உதவி செய்தவர்களையும் வெகுவாக பாராட்டினார்.

கப்பல்நிறுவனத்தை தொடங்கியதுடன் வ.உ.சி.நின்றுவிடவில்லை. அடுத்த ஆண்டு தூத்துக்குடியில் இயங்கி வந்த ஆங்கிலோர் நடத்திய ‘கோரல் மில் ‘ என்கிற நூற்பாலையில் தொழிலாளர்களை ஒன்று திரட்டி, சுப்பிரமணிய சிவாவின் துணையுடன் வேலை நிறுத்தத்தை தொடங்கினார். இந்தப் போராட்ட நிகழ்வு இந்திய அளவில் பேசுபொருளானது.

அழுத்தமான சைவராக இருந்த வ. உ .சி.சனாதன சிந்தனையில் இருந்து விலகி இருந்தார். வ உ சி யின் திரிசூலம் என்கிற இன் நூலை நாம் வாசிப்பதின் மூலம் வ.உ. சிதம்பரனாரை அறிந்து கொள்ள உதவும். இந்நூலை அனைவரும் வாங்கி படிக்கவும்

–சமரன்

| | |
|---|---|
| நூலாசிரியர் | : ஆ. சிவசுப்பிரமணியன் |
| பக்கம் | : 110 விலை: 95 |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 |

## ஆளுநரின் அத்துமீறலை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் பிப்.28ல் ஆர்ப்பாட்டம்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, அரசியல் அழைப்புச் சட்டத்தை அலட்சியம் செய்தும், அத்துமீறியும், சிறுமைப்படுத்தியும் செயல்பட்டு வருவதை ஒட்டுமொத்த மக்களும் கண்டித்து வருகின்றனர்.

அரசியலமைப்பு அதிகாரப் பொறுப்பில் இருந்து வரும் ஆளுநர், அரசியல் கட்சியின் சேவகராக செயல்பட்டு வருவது எதிர்மறை நடவடிக்கையாகும். அண்மைக் காலமாக கம்யூனிஸ்டுகள் மீதும், காரல் மார்க்ஸ் குறித்தும் விஷமத்தனமான கருத்துக்களை தெரிவித்து ஆத்திரமூட்டும் செயலில் ஈடுபட்டு வருகிறார். அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படைப் பண்பான மதச்சார்பின்மையை தகர்த்து, இந்தியாவும் மதம் சார்ந்த நாடு தான் என பேசி வருகிறார். ஆளுநரின் நடவடிக்கை எல்லை மீறி சென்று தமிழ்நாட்டின் அமைதி நிலையை சீர்குலைத்து வருகிறார். ஆளுநரின் அத்துமீறல்களை கண்டிக்கும் முறையில், கட்சி அமைப்புகள் மாவட்ட வட்ட, வட்டார அளவில் வரும் 28.02.2023 அன்று தமிழ்நாடு முழுவதும் கண்டன முழக்க ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை முறையாக அமல்படுத்துக

### பினாய் விஸ்வம் வலியுறுத்தல்



பிப்ரவரி 9 மக்களவையில் நேரமில்லா (பூஜ்யம்) நேரத்தின்போது சிபிஐ தேசியக் குழு செயலாளர் பினாய் விஸ்வம் எம்பி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை (விநிழிஸிணிநிகி) முறையாக அமல்படுத்துவதை உறுதிப்படுத்துமாறு கோரினார்.

அச்சட்டத்தின் கீழ் பணியாற்றும் தொழிலாளர்களின் துன்ப துயரப் பாடுகளை வருத்தம் தோய்ந்த இதயத்துடனும், கண்டனங்களைத் தெரிவித்தும் அவர் அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். ‘இத்திட்டத்தில் 15.28 கோடி எண்ணிக்கையிலான மனிதர்கள் உழைப்பது நாட்டிற்காக, அவர்களும்கூட தேசத்தின் செல்வத்தை உற்பத்தி செய்கிறார்கள். எனவே அவர்களின் துன்பங்களையும் வாழ்வாதாரங்களையும் அரசும் இந்த அவையும் கவனித்துக் கொள்ள வேண்டும்’.

மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்புத் திட்டம் தேசத்தின் 2,78,342 பஞ்சாயத்துகளில் செயல்படுத்தப்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டியவர், “இத்திட்டம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (UPA-I) அரசு பெற்றெடுத்த குழந்தை; இத்திட்டத்தின் கொள்கைகளை வகுப்பதில் இடதுசாரியினர் முக்கிய பங்காற்றினர் எனக் கூறுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன்’’ என்றார்.

அந்த அரசு தொடங்கிய செயல்திட்டத்தை இன்றைய அரசு கொன்றுவிட முயல்கிறது. நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் இத்திட்டத்திற்கு வெறும் ரூ60ஆயிரம் கோடி மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். இந்தத் தொகை மிகவும் அற்பமானது, ஏழை மக்களுக்கான இத்திட்டத்தைச் செயல்படுத்த இத்தொகை போதுமானது இல்லை எனச் சுட்டிக் காட்டினார்.

இத்திட்டத்தில் பணியாற்றும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் சில நாட்கள் முன்பு தேசியத் தலைநகரில் ஏஐடியுசி பதாகையின் கீழ் ஒரு போராட்டத்திற்காக வந்து குழுமினர். அவர்களுடைய கோரிக்கை மிகச் சாதாரணமானது.

‘வருடத்தின் 365 நாட்களில் இச்செயல் திட்டத்தின் வேலைநாட்களை 200 நாட்களாக உயர்த்துக.’ மேலும் அவர்கள் கோரிக்கை ஒரு நாளின் குறைந்த பட்ச ஊதியம் ரூ700ஆக உயர்த்த வேண்டும். ஆனால் இன்றோ அவர்கள் பெற்று வருவது ஒரு நாளைக்கு வெறும் 217ரூபாய் ஊதியம் மட்டுமே. இதைக் கொண்டு எப்படி ஒரு குடும்பம் ஜீவித்து வாழ முடியும்? உண்மையில் அவர்கள் வாழவில்லை, உயிரைக் கையில் பிடித்திருக்க முயற்சிக்கிறார்கள், அவ்வளவே என்றார்.

இறுதியாகப் பினாய் விஸ்வம் இப்பிரச்சனையைத் தீவிரமானதாக எடுத்துக் கொள்ள அவையையும் அரசையும் வேண்டினார். மேலும் குறைந்த பட்ச ஊதியத்தை ரூ700 ஆகவும், உறுதியளிக்கப்பட்ட வேலை நாட்களை ஆண்டிற்கு 200ஆகவும் உயர்த்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வற்புறுத்தினார்.

### பல்வேறு பிரச்சினைகளுக்காக

## ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் ஆர்ப்பாட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்ட ஜனசக்தி ஒன்றிய செய்தியாளர் நந்தகோபால் அவர் பணியாற்றும் வங்கியில் தற்காலிக உதவியாளராக பணியாற்றி வருகிறார். இரவு நேரங்களில் மர பெஞ்சின் மீது படுத்து தூங்குகிறார். அவன் தலித் தரையில்தான் படுத்து தூங்க வேண்டும் என வங்கி கட்டிடத்தின் உரிமையாளர் வங்கி நிர்வாகத்திற்கு அழுத்தம் கொடுத்து அவரை வேலையை விட்டு வெளியேற்றி இருக்கிறார்.

உளுந்தூர்பேட்டை அடுத்த கிராமத்தில் 30 ஆண்டுகளாக கோவில் நிலத்தில் குடியிருந்து வந்த பூம்பூம் மாட்டுக்கார சமூகத்தைச் சார்ந்த மூன்று குடும்பங்களை புல்டோசர் வைத்து அகற்றப்பட்டுள்ளது.

உடனடியாக பூம்பூம் மாட்டுக்காரர் குடும்பத்தினருக்கு இலவச மனைபட்டா வழங்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், தென்முடியனூர் கிராமத்தில் 80 ஆண்டுகளாக அங்குள்ள கோயிலுக்குள் அனுமதிக்கப்படாமல் இருந்த தலித் மக்கள் கடந்த மாதம் கலெக்டர் எஸ்.பி. யிடம் முறையிட்டு மனு கொடுக்கப்பட்ட நிலையில் மாவட்ட நிர்வாகத்தின் முன்னிலையில் கோவில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால் ஒரு வாரத்துக்குள் ஆதிக்க சாதியினரின் அழுத்தத்தால் கோவில் பூட்டப்பட்டு கோவில் நுழைவுப் போராட்டத்தை முன்னெடுத்த இந்திரம்மாள் மளிகைக் கடை தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தலித் மக்கள் மீதான வன்கொடுமைகளை கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலச் செயலாளர் வழக்குரைஞர் கீ.சு.குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ராமசாமி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் வெங்கடேசன் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் மீசை முருகேசன், கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். பாதிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## அரசு போக்குவரத்து கழக ஏஐடியூசி தொழிற்சங்க மாநில நிர்வாகக்குழு கூட்டம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் ஏஐடியூசி தொழிற்சங்கத்தின் மாநில நிர்வாகக்குழு கூட்டம் தருமபுரியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஏஐடியூசி போக்குவரத்து கழக மாநில துணைத்தலைவர் சையத்இப்ராகீம் தலைலை வகித்தார்.மாநில செயலாளர் ஆர்.ஆறுமுகம் வேலை அறிக்கை வைத்து பேசினார்.ஏஐடியூசி மாநில பொது செயலாளர் எம்.இராதாகிருஷ்ணன்,மாநில தலைவர் காசி விஸ்வநாதன்,இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன்,மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

வெளிச்சந்தை மூலம் பணி நியமனம் செய்வதை கைவிட வேண்டும், காலி பணியிடங்கள் நேரடி நியமனம் செய்திட வேண்டும்.

ஊதிய ஒப்பந்தப்படி 8 மாத சம்பள நிலுவைத்தொகை வழங்கிட வேண்டும்.

ஊதிய முரண்பாடுகள் தீர்வு காணப்படவேண்டும். ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு பணபலன்கள் வழங்கவேண்டும்.

7ஆண்டுகள் நிறுத்தப்பட்ட அகவிலைப்படி உயர்வு வழங்கிட வேண்டும்.பாரபட்ச ஒழுங்கு நடவடிக்கை தண்டனை முறைகள் கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் நடத்தும்

## இந்தி, சமஸ்கிருதத் திணிப்பு எதிர்ப்புக் கருத்தரங்கம்

**நாள் : 25.02.2023, சனி மாலை 5.30 மணி**
**இடம்: J.J. அரங்கம், ICSA மையம்,**
**107, பாந்தியன் ரோடு (எழும்பூர் மியூசியம் எதிரில்)**
**எழும்பூர், சென்னை - 10.**

தலைமை : தோழர். **எஸ்.கே.கங்கா**
மாநில துணைத் தலைவர்
முன்னிலை : தோழர் **மா.லெமூரியா**
பொருளாளர், சென்னை மாவட்டம்
வரவேற்புரை : தோழர் **எஸ்.சங்கரநாராயணன்**
பொருளாளர், காஞ்சிபுரம் மாவட்டம்

**சிறப்புரை**

முனைவர் **ர.பூங்குன்றன்** தொல்லியல் அறிஞர்
**சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகம்**
முனைவர் **உலோ.செந்தமிழ்க்கோதை** சமூக விஞ்ஞானம்
**1967 இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்**
எழுத்தாளர் **தமிழ்மகன்**
**உலக மொழிகளும், தமிழும்**
தோழர் **பொழிலன்** ஒருங்கிணைப்பாளர், தமிழக மக்கள் முன்னணி
**சமஸ்கிருதத் திணிப்பும் பிற மொழிகள் அழிப்பும்**
பேரா. நல்லூர் **சா.சரவணன்** துறைத் தலைவர்,
சைவ சித்தாந்தத் துறை, சென்னை பல்கலைக் கழகம்
**தமிழும் சமஸ்கிருதமும்**
பேரா. **மணிகோ.பன்னீர்செல்வம்** பாவேந்தர் பாரதிதாசன் ஆய்விருக்கை, உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
**இந்தி எதிர்ப்பு இலக்கிய வகைமை**
முனைவர் **ஆ.பத்மாவதி** தொல்லியல் அறிஞர்
**முந்துதமிழ் வரிவடிவம் தமிழி**
திரு. **ஆர்.நடராஜன்** உயர்நீதிமன்ற வழக்கறிஞர்
**இந்தி திணிப்புக்கு எதிரான நீதிமன்ற வழக்குகள்**
நன்றியுரை : தோழர் **பாலாஜி** பொருளாளர், திருவள்ளூர் மாவட்டம்
நிகழ்ச்சி தொகுப்பு : தோழர் **கணபதி இளங்கோ**
செயலாளர், சென்னை மாவட்டம்

**நாள் : 26.02.2023, ஞாயிறு காலை 10 மணி**
**இடம்: எல்.எல்.ஏ கட்டிடம், தேவநேயப் பாவாணர் நூலக அரங்கம்,**
**735, அண்ணா சாலை, சென்னை - 02.**

தலைமை : கவிஞர் **சி.ராமலிங்கம்**
முன்னிலை : தோழர் **டி.எஸ்.நடராஜன்**, திரு **ஜீவா மணிக்குமார்**, திரு **ஜி.மனோகரன்**, திரு **து.நாராயணசாமி**
வரவேற்புரை : கவிஞர் **சி.கருணை மாரி**
கருத்தரங்க நோக்க உரை : மருத்துவர் **த.அறம்**
பொதுச் செயலாளர், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்

**சிறப்புரை**

தோழர் **இரா.நல்லகண்ணு**
மூத்த தலைவர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
திரு **தொல்.திருமாவளவன்** எம்.பி
தலைவர்,விடுதலை சிறுத்தைகள் கட்சி
மாண்புமிகு **தங்கம் தென்னரசு**
தமிழ் வளர்ச்சி மற்றும் தொழில்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு
தோழர் **கே.சுப்பராயன்** எம்.பி
திருப்பூர் தொகுதி மக்களவை உறுப்பினர்
மானமிகு **கலி.பூங்குன்றன்**
துணைத் தலைவர், திராவிடர் கழகம்
திரு **ஜெகத்ரட்சகன்** எம்.பி
அரக்கோணம் தொகுதி மக்களவை உறுப்பினர்
முனைவர் **பொன்னவைக்கோ** மேனாள் துணைவேந்தர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
டாக்டர் **ஜி.ஆர்.இரவீந்திரநாத்** பொதுச் செயலாளர்,
சமூக சமத்துவத்திற்கான பாக்டர்கள் சங்கம்
நிகழ்ச்சி தொகுப்பு : மரு. **ஏ.ஆர்.சாந்தி**
நன்றியுரை முனைவர் **கணபதி இளங்கோ**

## சமூக வலைதளங்களை பயன்படுத்துவது எப்படி? கருத்தரங்கம்

**நாள் : 26.02.2023, ஞாயிறு மாலை 3.00 மணி**
**இடம்: எல்.எல்.ஏ கட்டிடம், தேவநேயப் பாவாணர் நூலக அரங்கம், 735, அண்ணா சாலை,**
**(ஆயிரம் விளக்கு மெட்ரோ ரயில் நிலையம் அருகில்)**
**சென்னை - 02.**

தலைமை :
தோழர் **ஆனந்த பாஸ்கர்**
முன்னிலை :
தோழர் **ச.செல்வகுமார்**
அறிமுக உரை :
தோழர் **ஏ.ஆர். சாந்தி**
சிறப்புரை
திரு. **பீர் முகமது** (ppodhu.com)
முன்னணிச் செய்தியாளர்,
நிறுவனர், இப்போது.காம், சென்னை.
நன்றியுரை :
தோழர் **அருண் அசோகன்**

**இவண்: தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்** சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், மாவட்டங்கள்

1ம் பக்க தொடர்ச்சி

உரையாற்றினர். இறுதியாக மாவட்ட துணைச் செயலாளர் எம்.நந்தகுமார் நன்றி கூறினார்.

**இராணிப்பேட்டை:** ராணிப்பேட்டை மாவட்டக் குழு சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இளையராஜா தலைமை வகித்தார். மாநிலத் துணைத் தலைவர் ஆ.பிரகாஷ் கண்டன உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் ரா.கார்த்திக், இளைஞர் பெருமன்ற மாவட்டத் துணைச் செயலாளர் ஜெ. பொன்னரசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சேலம்:** சேலத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் கே.எஸ்.தீனதயாளன் தலைமை வகித்தார். இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ஆர்.ரமேஷ், மாணவர் பெருமன்ற முன்னாள் தலைவர் கனிபூங்குன்றன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார். மேலும் பா.நேதாஜி டி.சந்துரு, எ.கரண், எ.கலைவாணன், கனிமொழி பூ.சுசிந்தர்நாத் பூ.சேகுவேரா ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட பொருளாளர் எம். மணிபாரதி நன்றி கூறினார்.

**ஈரோடு வடக்கு:** சத்தியமங்கலத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநில துணைச் செயலாளர் கே.பிரபு தலைமை வகித்தார். எஸ்.காருண்யாதேவி மற்றும் வி.திலீப்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோரிக்கைகளை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் கே.சக்திவேல் மற்றும் எம்.சரவணகுமார், எம்.சுரேந்தர் பேசினார்.

பவானியில்நடைபெற்றஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் கு.ஸ்டாலின் கௌதம் தலைமை வகித்தார். ம.அரவிந்தன், ப.ரகு, மு. பார்த்தசாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோரிக்கைகளை வலியுறுத்தி ப.மா. பாலமுருகன், வி.ஜி..அருள் மற்றும் செ. தாமோதரன் ஆகியோர் பேசினார்.

**திருவாரூர்:** திருவாரூரில் மாநில துணை செயலாளர் ஜெ.பி.வீரபாண்டியன், மாவட்டத் தலைவர் ஜே.பாரத செல்வன் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் துரை. அருள்ராஜன், மாணவர் பெருமன்ற தேசிய குழு உறுப்பினர் சு.பாலசுப்பிரமணியன் ஆகியோர் பேசினார்கள். மேலும், மாணவர் பெருமன்ற முன்னாள் மாநில குழு உறுப்பினர் எஸ்.பாலமுருகன், மாவட்டப் பொருளாளர் க.கோபி,மாவட்ட துணைத் தலைவர்கள் எஸ்.சிவனேஷ, வி.கனகராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**இராமனாதபுரம்:** மாவட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட் இந்துமதி தலைமை வைத்தார். மாணவர் பெருமன்ற நிர்வாகிகள் சண்முகராஜன், மலையாண்டி, ராஜீவ்காந்தி ஆகியோர் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**மதுரை புறநகர்:** மேலூர் அரசு கலைக் கல்லூரியில் மதுரை புறநகர் மாவட்ட தலைவர் எம்.ஜெகநாதன் தலைமையில் மற்றும் மாநில குழு உறுப்பினர் க.சேது பாண்டி முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநில துணை தலைவர் விக்ரம் கண்டன உரையாற்றினார்.

**புதுக்கோட்டை:** திலகர் திடல் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநில துணை செயலாளர் கே.முத்துலெட்சுமி தலைமை தாங்கினார். மாவட்ட துணைச் செயலாளர் கே.கஸ்தூரி, மாநிலக் குழு உறுப்பினர் என்.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜீவானந்தம், மு.கைலாசபாண்டியன், மு.விஜய், பா.யாழினி, மணிராஜ், முத்துலெட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோவை:** வடவள்ளியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநில துணைத் தலைவர் பா.நி.சினேகா தலைமை தாங்கினார். கோவை மாவட்டச் செயலாளர் மு.பிரசாந்த் கண்டன உரையாற்றினார், மாவட்ட தலைவர் கா.கிருஷ்னகேசவன் நன்றியுரை ஆற்றினார். மாவட்ட துணை தலைவர் பிரவீன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

**கள்ளக்குறிச்சி:** திருக்கோவிலூர் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் பி.கணேசன் தலைமை வகித்தார். முன்னாள் மாநில துணைத்தலைவர் ஏ.வி.சரவணன், இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் விஜய் கோரிக்கை உரையாற்றினர். மாணவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**தேனி:** தேனியில் மாவட்டச் செயலாளர் ஆனந்த் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**விழுப்புரம்:** அரசு தொழில்நுட்ப கல்லூரி முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஆகாஷ் தலைமை தாங்கினார். இளைஞர் பெருமன்ற நிர்வாகி பிராங்களின் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்.

**மயிலாடுதுறை:** பொறையார் தரங்கை பேராயர் மாணிக்கம் லுத்தரன் கல்லூரியில் கல்லூரியின் கிளை தலைவர் சிரஞ்சீவி தலைமையில் நடைபெற்றது. இதில் கல்லூரியின் பொறுப்பாளர்கள் கவியரசன், ராஜுமேனன், அலெக்ஸ்பாண்டியன், ராஜகுரு, ஜீவரசி ஆகியோர்கள் கலந்து கொண்டனர். கோரிக்கைகளை விளக்கி மாநில துணைச் செயலாளர் வீரபாண்டியன், மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் பகத்சிங், மாநிலக் குழு உறுப்பினர்கள் பாரதசெல்வன் ஆகியோர் உரையாற்றினர்.






JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 25.02.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்
# மாமனிதர் தோழர். ப.மாணிக்கம்
# நூற்றாண்டு நிறைவு விழா



**நாள்: 04.03.2023 சனிக்கிழமை மாலை 4 மணி**
**கலைவாணர் அரங்கம், வாலாஜா சாலை, சென்னை**

தலைமை : தோழர் **இரா.முத்தரசன்** மாநிலச் செயலாளர்
முன்னிலை : தோழர் **கே.சுப்பராயன்** M.P. மாநிலகட்டுப்பாட்டுக்குழு தலைவர்
வரவேற்புரை : தோழர் **நா.பெரியசாமி** மாநிலத்துணைச் செயலாளர்
துவக்கவுரை : தோழர் **டி.ராஜா** பொதுச்செயலாளர்

நூற்றாண்டு மலர் வெளியிடுபவர்:
தோழர் **இரா.நல்லகண்ணு**

மலர் பெற்று, விழா நிறைவுரை:
மாண்புமிகு **மு.க.ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

திரு.**கி.வீரமணி**
தலைவர், திராவிடர் கழகம்
திரு.**வைகோ** M.P.
பொதுச்செயலாளர், மதிமுக,
தோழர்.**தொல்.திருமாவளவன்** M.P.
தலைவர், வி.சி.க
திரு.**K.M.காதர்மொய்தீன்**
தலைவர், இ.தே.மு.லீக்

திரு.**K.S.அழகிரி**
தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ்
தோழர்.**கே.பாலகிருஷ்ணன்**
மாநிலச் செயலாளர் CPI(M)
திரு.**J.H.ஜவாஹிருல்லா**
தலைவர், ம.ம.க
திரு.**E.R.ஈஸ்வரன்** தலைவர், கொ.ம.தே.க
திரு.**தி.வேல்முருகன்** தலைவர், த.வா.க

நன்றியுரை:
தோழர் **மு.வீரபாண்டியன்**
மாநிலத்துணைச் செயலாளர்

தங்கள் வருகையை அன்போடு எதிர்பார்க்கும்..
**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி,** தமிழ்நாடு மாநிலக்குழு

Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: K.Subbarayan .,
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.